இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 253 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(13.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 23, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT
The Reliable Fan
1st June to 30th June 2023
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# ரணில்-மொட்டு முரண் தீவிரம்!

## ஜனாதிபதியின் கூட்டத்தை பகிஷ்கரித்து பொதுஜன பெரமுன அதிரடி

**நமது அரசியல் செய்தியாளர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் அரசியல் ரீதியாக பிளவு ஏற்பட்டுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் நேற்றிரவு 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தன.

ஆளுங்கட்சி குழுக்கூட்டம் நேற்றிரவு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றபோது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதனை பகிஷ்கரித்ததன்மூலம் இந்த முரண்பாடு மேலும் தீவிரமடைந்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரித்தாளும் வேலைகளை செய்துவருவதாக அக்கட்சி நீண்ட நாட்களாக சுட்டிக்காட்டி வந்தது. அதேபோல ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி இப்போது ரணிலுடன் இணைந்து செயற்பட்டு வரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, ரணிலின் கூட்ட நிகழ்வுகளுக்கான அழைப்பை விடுப்பதாகவும் கட்சியின் இளம் எம்.பிக்களை ரணிலின் பக்கம் அழைப்பதற்கான செயற்பாடுகளை அவர் மேற்கொள்வதாகவும் பொதுஜன பெரமுன கடந்த வாரம் சாடியிருந்தது.

இந்தப் பின்னணியில் ஆளுங்கட்சியின் குழுக்கூட்டத்தை நேற்று பகிஷ்கரித்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ரணிலின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டு அவருக்கு நீண்ட கடிதமொன்றை அனுப்ப உத்தேசித்துள்ளதாக பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் இராஜினாமா

**நா. தினுஷா**



தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க தனது பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார். அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக தான் இந்தப் பதவியிலிருந்து விலகுவதாக அநுர மனதுங்க அந்தக் கடிதத்தினூடாக அறிவித்துள்ளார். எனினும், பேராசிரியர் மனதுங்கவின் பதவி விலகலுக்கான காரணம் தெளிவாக இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றிருந்தது. அந்தச் சந்திப்பு இடம்பெற்று சில தினங்களுக்கு பின்னரே பேராசிரியர் மனதுங்க அவரது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

02 பக்கம்

# மின்கட்டணம் 03 வீதத்தால் குறையும்

**கே. சுபானி**

மின்கட்டணத் திருத்தத்தின்போது மொத்த கட்டணத்தில் 03 சதவீதம் குறைக்கப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை மாதம் மேற்கொள்ளப்படவுள்ள மின்கட்டண திருத்தத்தின்போது மின்கட்டணம் குறைக்கப்படவுள்ளமை தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள மின்கட்டண குறைப்பு விபரத்தில் மேலும்... 02 பக்கம்



வரலாற்று சிறப்பு மிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று திங்கட்கிழமை(12) காலை திறந்து வைக்கப்பட்டதுடன் பெருந்திரளான பக்தர்கள் நடைபயணமாக சென்றனர். (பாறுக் ஷிஹான், வீ.சுகிர்தகுமார், எஸ்.பேரின்பராஜா)

## கமெண்ட் கந்தர்...



நாய்களோடு படுத்தா உண்ணியோட தான் எழும்பவேண்டிவரும் எண்டது அரசியலுக்கும் பொருந்தும் என்னங்கோ...

# தேர்தல் நடத்தாமைக்கு பொறுப்புக்கூற முடியாது

## குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க

**நா. தினுஷா**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மீது நேரடி குற்றச்சாட்டு முன்வைப்பதை வன்மையாக கண்டிக்கிறோம். நிதி தொடர்பான அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கிறது. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அந்த அதிகாரம் இல்லை. பணத்தை அச்சிட்டு தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இல்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

02 பக்கம்

## உஷ்



முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அவர் அங்கிருந்தபடி ஜனாதிபதி ரணிலின் அரசியல் வேலைகளை செய்து வருவதாகவும் எதிர்க்கட்சியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.



# அரசை கவிழ்க்க டலஸ் வகுக்கும் புதிய வியூகம்

## சஜித், அநுர உள்ளிட்ட தரப்பினருடனும் பேச்சு

02 பக்கம்

# கம்பஹா பல்கலையில் பெயர்ப்பலகை மாத்திரம்

## வசதிகள் மேம்படுத்தப்படவில்லையென சஜித்திடம் மாணவர்கள் சுட்டிக்காட்டு



02 பக்கம்

# தடகள வீரர் கிரேஷன் சுவிஸில் தலைமறைவு



சுவிட்ஸர்லாந்தில் நடைபெறும் உலக உள்ளக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற இலங்கையின் தேசிய தடகள வீரர் கிரேஷன் தனஞ்சய (வயது26) தலைமறைவாகியுள்ளார்.

இலங்கையின் நம்பிக்கைக்குரிய தடகள வீரராக திகழ்ந்த இவர், தலைமறைவாகியுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பாவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்லும் இலங்கை வீரர்கள் தலைமறைவாவது வாடிக்கையாகி வருவது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு செல்லும் வைத்திய நிபுணர்கள்

## வெற்றிடத்தை நிரப்ப காலதாமதமாகுமென சுகாதார அமைச்சு அறிவிப்பு

**நா. தினுஷா**

நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், விசேட வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாகவும் அந்த வெற்றிடங்களுக்கு புதிய வைத்தியர்களை நியமிக்க சிறிது காலம் தேவைப்படும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

02 பக்கம்

# மே 09 வன்முறைகளுடன் பொலிஸாருக்கு தொடர்பா?

## 73 பேர் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

**நா. தினுஷா**

நாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய 73 பொலிஸ் அதிகாரிகள் குறித்து பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினரால் முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 69 பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 73 அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதனுடன் தொடர்புடைய வகையில் 62 பிரதான பொலிஸ் பரிசோதகர்கள், பெண் பொலிஸ் பரிசோதகரொருவர், 06 பொலிஸ் பரிசோதகர்கள், உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சிப்பாய் ஒருவர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் உள்ளடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

## ராஜகுமாரியின் மரணம்

# நீதிகோரி கொழும்பில் பாரிய போராட்டம்

**நா. தினுஷா**

வெலிக்கடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் கடந்த மே மாதம் 11ஆம் திகதி உயிரிழந்த ஆர்.ராஜகுமாரி என்ற பெண்ணுக்கு நீதிகோரி தேயிலைத் தொழிலாளர் நிலையம் மற்றும் வடக்கு, கிழக்கு சகோதரத்துவம் ஆகிய அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் நேற்று (12) இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அருட்தந்தை சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

02 பக்கம்

# தாய், தந்தை, மகன் விபத்தில் உயிரிழப்பு

## வரக்காப்பொலவில் துயரம்

வரக்காப்பொல - துல்ஹிரிய பகுதியில் நேற்று (12) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர். முச்சக்கர வண்டியொன்றும் ரிப்பர் ரக வாகனமொன்றும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் 40 வயதான தந்தை, 39 வயதான தாய் மற்றும் 13 வயதான மகன் ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், விபத்து தொடர்பில் ரிப்பர் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வரக்காப்பொல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பியோடிய சந்தேக நபர்

## பொதுமக்களின் உதவியை நாடும் பொலிஸ்

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லெஸ்லி ரனகல மாவத்தையில் கடந்த மே மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தின் சந்தேகநபரை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியை பொலிஸ் திணைக்களம் நாடியுள்ளது.



இந்த நபர் பிரதேசத்தை விட்டு தப்பியோடி தலைமறைவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புஷ்பராஜ் விக்னேஸ்வரன் என்ற 27 வயதான சந்தேக நபர் கொழும்பு 13, ஜம்பட்டா வீதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

அவர் தொழில் ரீதியாக மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர் எனவும் வலது கையின் முழங்கைக்கு கீழே யானை முகம் ஒன்றை பச்சை குத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரைப் பற்றி ஏதேனும் தகவல் தெரிந்தால் பணிப்பாளர் - கொழும்பு குற்றப் பிரிவு - 071 859 1733, பொறுப்பதிகாரி - கொழும்பு குற்றப் பிரிவு - 071 859 1735, பொறுப்பதிகாரி - விசாரணைப் பிரிவு - 071 859 6503 ஆகிய தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# மாணவர்களுக்கு போதை மாத்திரை விநியோகம்

## ஆயிரம் வில்லைகளுடன் களுத்துறையில் ஒருவர் கைது

**கே. சுபானி**

களுத்துறை பிரதேச பகுதிநேர வகுப்பு மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனையில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 25 வயதுடைய களுத்துறை, கித்துலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், அவர் களுத்துறை கலமுல்ல பிரதேசத்துக்கு சென்றுகொண்டிருந்தவேளை ஆயிரத்து 10 போதைவில்லைகளுடன் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதை வில்லை ஒவ்வொன்றையும் ரூபா 150 இற்கு விற்பனை செய்துள்ளதுடன், அவை நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஒருவகையான மருந்து என சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் களுத்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.



# ஐ.எம்.எவ். நிபந்தனைகளை செப்டெம்பர் மாதத்துக்குள் நிறைவேற்ற நடவடிக்கை

## அதிகாரிகள் இரவு பகலாக உழைப்பதாகக் கூறுகிறார் நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் நிறைவேற்றுவதற்காக அரசாங்கமும் அதிகாரிகளும் இரவு பகலாக உழைத்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்லவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னர் செய்து கொள்ளப்பட்ட 16 உடன்படிக்கைகளைப் போன்று அல்லாமல் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதாகவும் இம்முறை இந்த செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் நன்கு அறிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற விவாதத்தின்போது உடன்படிக்கையின் ஒவ்வொரு சரத்து தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துகளை தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக் கொள்ளப்பட்ட எந்தவொரு நிபந்தனைகளையும் அல்லது சரத்துகளையும் மறைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை.

புதிய மத்திய வங்கி சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் அங்கீகரிப்பது போன்ற பல முக்கிய நடவடிக்கைகள் அடுத்த வாரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் சியம்பலாபிட்டிய ஒப்புக்கொண்டார்.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தங்களின் செயல்திட்டத்தை செயற்படுத்துவதற்கான காலக்கெடுவை ஏற்பாடு செய்ய ஒரு விசேட குழு பணிபுரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில நிபந்தனைகளை நிறைவேற்ற மூன்று மாத கால அவகாசம் உள்ளதாகவும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் துரித கதியில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் நீண்ட கால அபிவிருத்தியை அடையவும் சில கடினமான மற்றும் செல்வாக்கற்ற முடிவுகள் எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, இலக்குகளை அடைவதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவும் தேவை என சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

# வரி அதிகரிப்பை கண்டித்து மீண்டும் போராட்டம் வெடிக்கும்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

அண்மைய வரி திருத்தத்துக்கு எதிராக மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

தொழில் வல்லுனர்களுக்கு சுமையாக உள்ள அண்மைய வரி அதிகரிப்பை திருத்தும் திட்டத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஒரு தீர்மானத்துக்கு வந்து அதன் திட்டத்தை இந்த வாரத்துக்குள் அறிவிக்கத் தவறினால், ஏனைய நிபுணர்களின் ஆதரவுடன் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் தொழில் வல்லுநர்கள் எவ்வாறு திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பது குறித்து ஏற்கனவே அதிகாரிகளுக்கு தங்கள் முன்மொழிவுகளை வழங்கியுள்ளனர்.

வரி தொடர்பான தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை தவிர வேறு வழியில்லை என அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

### தேர்தல் நடத்தாமைக்கு...

கொழும்பில் நேற்று (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக, மாவட்டங்களுடன் தொடர்புடைய கிராம சேவகர் பிரிவினர் மற்றும் விசேட கணக்கெடுப்பு அதிகாரிகள் இந்த கணக்கெடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்கள். கிராம சேவகர் பிரிவில், அதிகாரிகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதால் கடமையில் இருக்கும் அதிகாரிகள் மிகவும் அர்ப்பணிப்புடன் அவர்களின் கடமைகளை புரிந்து வருகிறார்கள்.

பணியாளர்களுக்கான தட்டுப்பாடும் நிலவுகிறது. பணியாளர் தட்டுப்பாட்டினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு மாற்றுத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வாய்ப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதனை தேர்தல் ஆணைக்குழுவினால் செய்ய முடியாது.

தேர்தலை நடத்துவதற்கு முன்னர் நீதி அமைச்சு உள்ளிட்ட சகல தரப்பினருடன் தேர்தல் ஆணைக்குழு பேச வேண்டும் என்றே சகலரும் கூறுகிறார்கள். ஆனால், அரசியலமைப்பு ரீதியான கடமையே தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது என்பதை எவரும் புரி ந்து கொள்வதாக இல்லை. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்தவேண்டியது அவசியமாகும். இதுதொடர்பில் எங்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கிறார்கள் என்றால் அதனை முழுமையாக எதிர்க்கிறோம்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வாக்காளர் இடாப்புக்கான கணக்கெடுப்பு செயற்பாடுகளின் பிரகாரம், இதனூடாக தயாரிக்கப்படும் வாக்காளர் பட்டியல் அடுத்த தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலாகவும் அமையலாம்.

தற்போது தயாரிக்கப்பட்டு வரும் வாக்காளர் பட்டியலை ஒக்டோபர் மாதத்தில் உறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதன்பின்னர், ஏதாவது தேர்தல் அறிவிக்கப்பட்டால் அந்த தேர்தலுக்கு இந்த வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படும். எனவே, வாக்காளர் கணக்கெடுப்பு செயற்பாடுகளுக்கு மக்களும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எங்களுக்கு 21 நாட்களே இருந்தன. இருந்தபோதும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் முறையாக கிடைக்காமையின் காரணமாகவே தேர்தலை முறையாக நடத்த முடியாமல் போனது.

பல்வேறு தரப்பினர் நீதிமன்றத்திலும் மனுதாக்கல் செய்திருந்தார்கள். நாங்களும் எங்களின் நிலைப்பாட்டை நீதிமன்றத்துக்கு தெரிவித்திருக்கிறோம். அதற்கமைய, எங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிய நேரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறாவிட்டால், வேட்பு மனுதாக்கல் செய்தவர்களின் கட்டுப்பணத்தை மீளப்பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டின் அடிப்படைச் சட்டம் அரசியலமைப்பாகும். யாராவதொரு அரசாங்க ஊழியர் தேர்தலொன்றில் வேட்பாளராக களமிறங்குவாராக இருந்தால் அவர் வேட்பாளராக இருக்கும் காலப்பகுதிக்குள் அரச கடமைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாகும். இதுவே அடிப்படைச் சட்டமுமாகும். அதன் பிரகாரமே தேர்தல் ஆணைக்குழுவும் செயற்பட்டு வருகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் எமக்கு சட்டப் பிரச்சினையே இருக்கிறது. இதுதொடர்பில் பாராளுமன்றத்தில் யோசனையொன்று முன்வைக்கப்பட்டு அது நிறைவேற்றப்படுமாக இருந்தால் அதன் பிரகாரம் தேர்தலை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இதுவரையில் 1.1 பில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு கொள்கையின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கும் பிரிவினரே பொறுப்புக் கூற வேண்டும். இதற்கு தேர்தல் ஆணைக்குழு பொறுப்பேற்க முடியாது. ஒருவேளை தேர்தலொன்று இடம்பெறுமாக இருந்தால் தற்போது வரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் வீண்போகப் போவதில்லை. இதுவரையில், செலவு செய்யப்பட்டுள்ள இந்த நிதி தொடர்பில் சட்டவாக்கப் பிரிவு மற்றும் நிறைவேற்று பிரிவு ஆகிய துறைகளை சேர்ந்தவர்களே இறுதி தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

தேர்தல் தொடர்பில் எவ்வளவு பேசினாலும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதியை நிர்வகிப்பதற்கான சுயாதீனத்தன்மை இல்லை. தேர்தல் ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்று 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் நிதியை பாராளுமன்றமே நிர்வகிக்கிறது. எனவே, பணத்தை அச்சிட்டு தேர்தலை நடத்தும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இல்லை. அதற்கான நிதியை எங்களால் திரட்டவும் முடியாது. இதுவே அரசியலமைப்பு நடைமுறையாகும். அதன் காரணமாகவே குறித்த கட்டத்துக்கு மேல் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறது என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் தேர்தல் ஆணைக்குழுவை நேரடியாக குற்றச்சாட்டு முன்வைக்கிறார்கள் என்றால் அதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றார்.

### ராஜகுமாரியின் மரணம்...

ராஜகுமாரிக்கு நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் கொலைகாரர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அருட்தந்தை சக்திவேல்,

பெருந்தோட்டங்களிலுள்ள அநேகமான பெண்கள் கொழும்புக்கு வருகை தருகிறார்கள். அவ்வாறு வருபவர்கள் கொழும்பில் தொழில் புரிகிறார்கள். பெருந்தோட்டப் பிரதேசங்கள் என்பது காலங்காலமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் பிரதேசங்களாகும். அபிவிருத்தி செய்யக்கூடாது, அங்கு அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கக் கூடாது, அங்கிருந்து அந்த மக்களை துரத்தவேண்டும் என்ற மனப்பான்மையோடு இந்த பேரினவாத அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே அந்த மக்கள் தொழில்வாய்ப்புக்காக கொழும்பு நோக்கி வருகின்றார்கள். இங்கு வந்து வீட்டுப் பணியாளர்களாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். இறுதியாக பதுளை, தெமோதரை பிரதேசத்தைச் சேர்ந்த ராஜகுமாரி என்பவர், தொழில் புரிந்த வீட்டில் பொருள் திருட்டு போய்விட்டதாகக் கூறி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், அவர் கொலையும் செய்யப்பட்டார்.

இந்த கொலைக்கு காரணமானவர்கள் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. கஜேந்திர குமார் எம்.பி. தவறு செய்துவிட்டார் என்று கூறி கொழும்புக்கு வந்து அவரை கைதுசெய்த பொலிஸார், இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இன்னும் கைதுசெய்யாமல் இருப்பதற்கான காரணம் புரியவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

### தொல்பொருள் திணைக்கள...

வடக்கு, கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தினால் காணிகள் சுவீகரிக்கப்பட்ட விடயம் தொடர்பில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தின் போது ஆராயப்பட்டிருந்தது.

மரபுரிமைச் சொத்துகள் என்ற பெயரில் அதிகப்படியான காணிகளை கையகப்படுத்தியமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை திணைக்களத்தினால் சுவீகரிப்பது தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு அமைச்சரவைக் கொள்கையை பின்பற்றுமாறும் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரிப்பதைத் தவிர்க்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தார்.

இதன்போது, ஜனாதிபதிக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.




### அரசை கவிழ்க்க டலஸ்...

**நமது நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடலை நடத்தவுள்ளதாக சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அலகப்பெரும தெரிவித்துள்ளார். எதேச்சதிகார ஜனாதிபதியை தோற்கடிக்க புதிய வியூகத்தை வகுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை கம்புருபிட்டியவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். டலஸ் அலகப்பெரும அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கத்தை தோற்கடிக்க பரந்த அளவிலான அரசியல் கூட்டணி கட்டியெழுப்பப்படவேண்டும். அதன் ஆரம்பகட்டமாக பிரதான எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

பாலத்தை கடப்பதற்கு போராடுவதை விட அதனை நிர்மாணிப்பதற்கு தலைமை தாங்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதனால் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு வேலைத்திட்டத்தை முன்வைப்பதே நாட்டு மக்களுக்கு செய்யக்கூடிய உயர்ந்த கடமையாகும் என்றார்.

### கம்பஹா பல்கலையில்...

கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் வெறும் பெயர்ப்பலகை மாத்திரமே காணப்படுவதாகவும் எந்தவொரு வசதியும் மேம்படுத்தப்படவில்லையெனவும் அதன் மாணவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அதன் மாணவர் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து விளக்கமளித்தனர்.

தேசிய மருத்துவ பல்கலைக்கழகமாக இருந்தபோதும் அது வெறுமனே பெயர்ப் பலகையுடன் மட்டும் நின்று விட்டதாகவும் 2021ஆம் ஆண்டிலிருந்து எந்த ஒரு பௌதீக வசதியும் மேம்படுத்தப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தற்போதுள்ள வசதிகளுக்குள் புதிய பீடங்களை நிறுவி நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்கள் மட்டும் பதவி உயர்வுகளை பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதன் காரணமாக தம்மால் முறையான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை எனவும் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தெரியப்படுத்தினர். இது தொடர்பில் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் விரைவில் பாராளுமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

### மின்கட்டணம்...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முதல் 30 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கான மின் கட்டணம் 26.9 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

மேலும், 31 முதல் 60 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கு 10.8 சதவீதமும் 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு 7.2 சதவீதமும் 91 முதல் 180 வரையான அலகுகளுக்கு 3.4 சதவீதமும் குறைக்கப்படவுள்ளன.

அத்தோடு, 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் நுகர்வோரின் மின்கட்டணம் 1.3 சதவீதம் குறைக்கப்படவுள்ளது.

மதவழிபாட்டுத் தலங்களுக்கான மின் கட்டணங்கள் 3.2 சதவீதம் குறைக்கப்படவுள்ள நிலையில் தொழிற்துறை, பொது அமைப்புகள், வீதி விளக்குகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கான மின்கட்டண விகிதங்களில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உணவகத் தொழிற்றுறைக்கான மின்கட்டணம் 12.6 சதவீதத்தால் குறைப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### மே 09 வன்முறைகளுடன்...

இந்த அதிகாரிகளில் தலைமையக பொலிஸ் பரிசோதனை மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளாக கடமையாற்றும் அதிகாரிகளை தொடர்ந்தும் அந்தப் பதவிகளில் வைத்திருந்துள்ளமை, இந்த விசாரணைகளுக்கு தடையாக இருப்பதால் 38 அதிகாரிகளை இடமாற்றம் செய்துள்ளதாகவும் ஒட்டுமொத்த சம்பவங்கள் தொடர்பிலும் மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் டிரான் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்போது, அந்த அதிகாரிகள் தவறு இழைத்துள்ளமை உறுதியானால், அவர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### வெளிநாடு செல்லும்...

நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் தற்போது 100 – 120 வரையிலான மருந்துகளுக்கே தட்டுப்பாடு இருந்து வருகிறது. தேவையான மருந்துகளுக்கான விலைமனு கோரல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த மருந்துகள் தற்போது எமக்கு கிடைத்து வருகிறது. எதிர்காலத்தில் இந்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதேபோன்று, நாட்டில் விசேட வைத்திய நிபுணர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதற்காகவே, வெளிநாடுகளில் பயற்சிகளை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்பும் வைத்தியர்களை அந்த இடைவெளிக்கு நியமிக்க எதிர்பார்த்துள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு சில காலம் தேவைப்படும். அந்தக் காலப்பகுதிக்குள் வைத்தியர்களுக்கான தட்டுப்பாடு உள்ளிட்ட ஒருசில குறைபாடுகளை அவதானிக்கக் கூடியதாக இருக்கும் என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள்**
**செவ்வாய்க்கிழமை**

**மேஷம்**: நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள் உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**ரிஷபம்**: குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப் படைவீர்கள்.

**மிதுனம்**: தொழில் ரீதியில் உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்கும் விரும் பிய பெண் உறவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்**: புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும் திட்டமிட்ட காரியங் களில் சாதனை செய்வீர்கள்.

**சிம்மம்**: வெளிநாட்டுப் பயணம் நினைத்தது போல நிறைவேறும் உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

**கன்னி**: ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம் கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**துலாம்**: நினைத்த காரியத்தில் வெற்றி. நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும்.

**விருச்சிகம்**: அதிர்ஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

**தனுசு**: வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசி பெற்றுக்கொள்ளுங்கள்.

**மகரம்**: நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உள்ளன.

**கும்பம்**: வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**மீனம்**: அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும்.

**திதி** : தசமி மு.ப.9.29 வரை பின் ஏகாதசி (தேய்)
**நட்சத்திரம்** : ரேவதி பி.ப.1.32 வரை பின் அஸ்வினி
**யோகம்** : சித்த யோகம் பி.ப.1.32 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்** : மு.ப. 7.51– 8.51 மணி வரை
**ராகுகாலம்** : 2.51 – 4.21 மணி வரை
**எமகண்டம்** : 8.51–10.21 மணி வரை
**குளிகை** : 11.51– 1.21 மணி வரை
**சந்திராஷ்டமம்** : சிங்கம்-கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்
**தனஅதிஷ்டம்** : பூசம், அனுஷம், உத்தரட்டாதி; (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்** : -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

## இரத்தினக்கல், ஆபரணக் கைத்தொழில்
# தேசிய கொள்கை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும ஆலோசனை வழங்கியுள்ளார்.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்ட ஆலோசனையை முன்வைத்தார்.

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் துறை வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில்துறை வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எத்திவைத்தனர்.

அதற்கமைய இந்நாட்டில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான தேசிய கொள்கையொன்றின் அவசியம் குறித்து இதன்போது வலியுறுத்தப்பட்டதுடன் வர்த்தக சங்கமொன்று தயாரித்துள்ள தேசிய கொள்கையுடன் தொடர்பான பிரேரணையும் குழுவில் முன்வைக்கப்பட்டது. அதற்கமைய, அனைத்துத் தரப்பினரதும் உடன்பாட்டில் தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிடுகையில், இத்துறையில் காணப்படும் பிரச்சினைகளை இரத்தினக்கல் அகழ்தல், இரத்தினக்கல் வெட்டுதல், மெருகூட்டுதல் மற்றும் பெறுமதி சேர்த்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உள்ளிட்ட வர்த்தக நடவடிக்கைகள், வர்த்தக மேம்பாடு ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்தி சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் பிரேரணைகள் மற்றும் முன்மொழிவுகளை உள்ளடக்கி முழுமையான அறிக்கையொன்றைத் தயாரித்து அதனை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, நிதி அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் அவதானத்துக்குக் கொண்டுவருமாறு தெரிவித்தார்.

அத்துடன், இரத்தினக்கல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிரமங்கள் தொடர்பில் வருகை தந்த பிரதிநிதிகள் தெரிவித்தனர். அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களும் வாரத்தில் ஒரு நாள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பிரதேச காரியாலயத்துக்குச் சென்று ஒருங்கிணைப்புடன் அனுமதிப்பத்திரம் வழங்கமுடியுமானால் இந்த செயற்பாட்டை வினைத்திறனாக்க முடியுமென குழுவினால் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை, தங்கம் இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக சுற்றுலாத்துறையை இலக்காகக் கொண்டு ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபடும் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். வெளிநாட்டு நாணயத்தில் மாத்திரம் வர்த்தகத்தில் ஈடுபடும் இந்த வர்த்தகர்களால் நாட்டுக்குள் பாரியளவு வெளிநாட்டு செலாவணி கொண்டுவரப்படுவதாகவும் தாம் உழைக்கும் அந்நியச் செலாவணியின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி தங்கம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு அரசினால் விதிக்கப்பட்டுள்ள வரி காரணமாக இந்தத் துறையிலுள்ள வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய, இந்த விடயங்கள் தொடர்பில் நிதியமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் துறைக்குள் பிரவேசிக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளமை தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. இந்த வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேசங்களில் பயிற்சி நிறுவனங்களை அமைத்தல் மற்றும் இத்துறையை பிரபல்யப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வருகை தந்த பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், ஏற்றுமதி செய்யும்போது காணப்படும் சிக்கல்கள், வரி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களை அறிக்கையாகத் தயாரித்து பொறுப்பான நிறுவனங்களுடன் கலந்துரையாடி அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் குழுவின் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, குழுவின் உறுப்பினர்களான அகில எல்லாவல, வருண லியனகே, நாலக பண்டார கோட்டேகொட மற்றும் வைத்திய கலாநிதி திலக்



ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மாடுகளை திருட முயன்ற இருவரை மடக்கி பிடித்த பொதுமக்கள்

**சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைப்பு**

வவுனியா, சமயபுரம் கிராமத்தில் மாடுகளை திருட முயற்சித்த இருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் நேற்றுக் காலை (12) 6.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமயபுரம் கிராமத்தில் கடந்த சில மாதங்களாக கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், கால்நடைகளை திருடுபவர்கள் பொதுமக்களினால் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படுகின்றனர். எனினும், அப்பகுதியில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இந்நிலையில், நேற்று (12) காலை 6.00 மணியளவில் சமயபுரம் விநாயகர் வித்தியாலய வீதியில் மாடொன்றை களவாட முயன்ற இருவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

## வடக்கின் நிலைமை பற்றி சார்ள்ஸ் - சுமந்திரன் பேச்சு



வடக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்ற திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (12) இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது வடக்கில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள், நிர்வாக நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநராக இருந்த ஜீவன் தியாகராஜா ஜனாதிபதியால் நீக்கப்பட்டு புதிய ஆளுநராக சார்ள்ஸ் நியமிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், முதல் தடவையாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## மஹரகம பிரதேசத்தில் நீர் விநியோகத் தடை

*(பேருவளை நிருபர்)*

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பெலேன்வத்த பொறுப்பதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட கனத்த வீதி நீர் உந்தும் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் அவசர பராமரிப்புப் பணிகளை முன்னிட்டு இன்று (13) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் மறுநாள் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணி வரையிலான 20 மணிநேர நீர் விநியோகத்தடை அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதற்கிணங்க கொரக்கப்பிட்டிய, சித்தமுல், அரவ்வல, ரன்மல்தெனிய, மஹரகம – பிலியந்தல வீதி, எதிரிசிங்க மாவத்தை, மொரக்கெட்டிய வீதி, மெதவெல வீதி, போக்குந்தர வீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து இணை வீதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முற்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.






**டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னிட்டு தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் சிரமதான நிகழ்வொன்று அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ் தலைமையில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்றது. இதன்போது பாடசாலை சுற்றுச் சூழல் பெற்றோரினால் சுத்தப்படுத்தப்பட்டன. இந்நிகழ்வில் பிரதி அதிபர் விஜயசுந்தரம், ஆசிரியர்கள் ,மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.**
**(படங்கள்:தலவாக்கலை நிருபர்)**

## வீட்டிலிருந்து உணவுப் பாதுகாப்பை ஆரம்பிப்பதே பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கான அத்திபாரம்

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்

*(சாவகச்சேரி நிருபர்)*

வீட்டிலிருந்து உணவுப் பாதுகாப்பை ஆரம்பிப்பதே பிள்ளைகளின் ஆரோக்கிய விருத்திக்கு அத்திபாரமாக அமையுமென சாவகச்சேரி- மந்துவில் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட மந்துவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது வீட்டின் சமையலறையிலிருந்தே உணவுப் பாதுகாப்பின் அடிப்படை விடயங்களைக் கடைப்பிடிக்க ஆரம்பிக்கவேண்டும். இதனால் உணவின் தரம் மேம்பட்டு பிள்ளைகளுக்கு அடிக்கடி உணவின் மூலம் ஏற்படும் நோய்களுக்கான வாய்ப்பு குறைவதால் அவர்கள் பொருத்தமான வளர்ச்சியையும் அடைவர். இதனால் சிறந்த மூளை வளர்ச்சி பிள்ளைகளில் ஏற்பட்டு ஆரோக்கியமான எதிர்கால சமுதாயம் உருவாக வழியேற்படும்.

சமையலறையில் கோழி முட்டைகளை மூடிய கடதாசிப்பெட்டியில் ஈ மொய்க்காதவாறு பேணுவதோடு, சமைக்க எடுக்கப்படும் முட்டைகளை இளம் சுடுநீரினாலோ அல்லது குளோரீன் நீரினாலோ கழுவி அழுக்குகளை அகற்றிய பின்னரே சமையலறைத் தட்டுக்கு கொண்டுவர வேண்டும். கழுவிய முட்டைகளை பின்னர் பயன்படுத்துவதாயின் குளிரூட்டியினுள் பேணப்பட வேண்டும்.

இறைச்சி மற்றும் கடலுணவுகளை சமையல் அறைக்குள் கொண்டுவர முன்னர் அதிலுள்ள மண் மற்றும் அழுக்குகளை நீக்க கழுவலாம். ஆனால், சமையல் அறைக்குள் வைத்து அவற்றை வெட்டியபின் கழுவக்கூடாது. அவ்வாறு செய்வது நோய்களை ஏற்படுத்தும் நுண்ணங்கிகள் சமைத்த அல்லது சமைக்காது உண்ணக்கூடிய உணவுகளில் குறுக்குத்தொற்று மூலம் நுழைந்து உணவுகளூடாக நோய்களை ஏற்படுத்தக்கூடும்.

சமைத்த அல்லது இலகுவில் பழுதடையக்கூடிய உணவுகளை மீண்டும் பயன்படுத்த வேண்டுமெனில் அவை தயாரித்து இருமணி நேரங்களுக்குள் குளிரூட்டியில் வைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் நான்கு மணித்தியாலங்களுக்குள் பயன்படுத்தலாம். பின்னர் அதனைப் பயன்பாட்டிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

உணவினால் ஏற்படும் ஒவ்வாமை ஒருவருக்கொருவர் வேறுபடக்கூடியது. எனவே, ஒவ்வொருவரும் அவரவர்க்கு ஒவ்வாமையான உணவுகளை தவிர்ப்பதே சிறந்தது.

கழிவுகளை மூடியுடைய குப்பைக் கூடையினுள்ளேயே சேகரிக்க வேண்டும். அத்துடன் ஈ பரவலையும் கட்டுப்படுத்த வேண்டும்.

எனவே, இவ்வாறான நுட்பங்களை சமையல் அறையிலிருந்து கடைப்பிடித்து உணவுப் பாதுகாப்பை எம்மால் மேம்படுத்த முடியும் என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூன் 13ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை


# பகிடிவதை விடயத்தில் நீதிமன்றத்தின் ஆக்கபூர்வ நடவடிக்கை தேவை!

கடந்த மூன்று ஆண்டுகளில் நடந்த பகிடிவதை சம்பவங்கள் மற்றும் பதிவான வழக்குகள் தொடர்பான விசாரணைகள் குறித்து தனித்தனியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மார்ச் 5, 2020 அன்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக (முகாமைத்துவ பீடம்) முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தின்போது, கனரக வாகனமொன்றின் படிக்கட்டுகளில் இருந்து கீழே உருட்டப்பட்டதால் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு ஆளான மாணவன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு, புவனேக அலுவிஹார, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பசிந்து ஹர்ஷன சில்வா என்ற குறித்த மாணவனின் தலை, மண்டையோடு, மூளை உள்ளிட்ட பல பகுதிகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. மூன்று மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், இதுவரை முழுமையாக குணமடையவில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு குறித்த மாணவன் மற்றும் மாணவனின் சகோதரி ஷெர்மிளா பிரியதர்ஷனி சில்வா ஆகியோர் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கருத்தில் கொண்ட நீதிமன்றம், இது தொடர்பில் பயனுள்ள தீர்வுகளை பரிசீலித்து, தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்க, விண்ணப்பத்தின் எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என்று கூறியது.

பகிடிவதை என்பது பல்கலைக்கழகக் கல்வியில் உடல், உடலியல் மற்றும் நடத்தை சார்ந்த விளைவுகளுடன், மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. அதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அனைத்து 16 அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர்கல்வி அமைச்சருக்கு தேசியக் கொள்கைகள் தொடர்பான உத்தரவுகளை வழங்க அதிகாரம் உள்ளதால் அவரை பிரதிவாதியாக மாற்றவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பகிடிவதையைத் தடுக்க பல்கலைக்கழகங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கடந்த ஆண்டில் பெறப்பட்ட புகார்கள் (பகிடிவதை தொடர்பாக) மற்றும் சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எட்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு துணைவேந்தர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

பகிடிவதை தொடர்பான அனைத்து விசாரணைகள் குறித்தும் எட்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தலையிட விரும்பும் அனைத்து தரப்பினரும் ஓகஸ்ட் 28ஆம் திகதிக்கு முன்னர் பிரதிநிதித்துவம் செய்ய கால அவகாசம் வழங்கப்படும். இதன் அடுத்த விசாரணை ஓகஸ்ட் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பகிடிவதை என்பது பல்கலைக்கழகங்களில் மிகவும் மோசமான அனுபவங்களை மட்டுமல்ல, மாணவர்களின் வளமான எதிர்காலத்தையும் தொலைக்க ஏதுவாகியிருக்கிறது. கடந்த 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி பதிவுசெய்திருந்த மாணவர்களில் 2989 பேர் பகிடிவதை காரணமாக பல்கலைக்கழகக் கல்வியை இடைநிறுத்திக் கொண்டார்கள் என்று பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அரச தரப்பின் இந்தத் தகவல்கள் பல்கலைக்கழகங்களில் இடம்பெறுகின்ற பகிடிவதை நாட்டின் மாணவ சமூகத்தினருக்குப் பல்கலைக்கழகக் கல்வியில் ஏற்டுத்தியுள்ள பாதிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெற்று சித்தியடைந்துள்ள மாணவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் பகிடிவதையினால் தமது உயர்கல்விக்கான வாய்ப்பைக் கைவிடச் செய்துள்ள அவலநிலை ஒருபுறமிருக்க, தனிப்பட்ட ரீதியிலும் மாணவர்களை இந்தப் பகிடிவதை மிக மோசமாகப் பாதித்துள்ளது.

பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான புள்ளிவிபரங்களின்படி, பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 6 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரூபா ரத்தினசீலி, ருகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவி ஆகிய இருவர் பாலியல் துன்புறுத்தல் சித்திரவதை காரணமாகத் தற்கொலை செய்துகொண்டனர்.

ஏனைய நான்கு மாணவர்கள் பகிடிவதையினால் உயிரிழந்தனர். அவர்களில் ஒருவராகிய ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்துறை மூன்றாம் ஆண்டு மாணவன் கே.ரீ.விஜேதுங்க 2002ஆம் ஆண்டு பகிடிவதைக்கு எதிரான கலந்துரையாடல் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தபோது, படுகொலை செய்யப்பட்டார்.

பல்கலைக்கழகக் கல்வியை இழந்தது மட்டுமல்லாமல், பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இவ்வாறு தமது உயிர்களையே இழப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட பகிடிவதைக்கு எதிராக கடுமையான சட்டங்களும் இயற்றப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தின் மூலம் பேராதனை பல்கலைக்கழகப் பொறியியல் துறையைச் சேர்ந்த 21 வயதுடைய செல்வவிநாயகம் வரப்பிரகாஷ் என்ற மாணவன் கடுமையான பகிடிவதை காரணமாக சிறுநீரகப் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்ததையடுத்து, பகிடிவதைக்கு எதிரான சட்டத்திற்கமைய ஒரு மாணவனுக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டதுடன், மற்றுமொரு மாணவனுக்குத் தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

பகிடிவதையைத் தடுப்பதற்காக கல்வி நிறுவனங்களின் பகிடிவதை மற்றும் வேறு வடிவங்களிலான வன்முறைகளைத் தடுப்பதற்கான 1998ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் காயத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளும், பீதியை அல்லது மனவருத்தத்தை ஏற்படுத்துகின்ற நடத்தைகளுமே பகிடிவதை என்று இந்தச் சட்டம் வரையறை செய்திருக்கின்றது. இந்த வகையில் பகிடிவதை என்பது மிகத் தெளிவான தண்டனைக்குரிய குற்றமாக அந்தச் சட்டம் வலியுறுத்தி உள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்படுகின்ற ஒருவர் 2 வருட கடுங்காவல் சிறைத்தண்டனைக்குள்ளாவார். அத்துடன், பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கவும் வேண்டும். பகிடிவதையின் மூலம் பாலியல் துன்புறுத்தலையும் மோசமான துயரத்தையும் ஏற்படுத்துகின்ற குற்றவாளிக்கு 10 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று இந்தச் சட்டம் கூறுகின்றது. அத்துடன், பாதிக்கப்பட்டவருக்குக் குற்றவாளி இழப்பீடும் வழங்க வேண்டும்.

ஒருவரைக் காயப்படுத்தும் நோக்கத்துடனோ அல்லது அவருடைய சுயகௌரவத்திற்கு அல்லது உடைமைக்கு சேதம் ஏற்படுத்தும் நோக்கத்துடனோ செய்யப்படுகின்ற பகிடிவதை குற்றச் செயலுக்கு 5 வருடங்கள் வரையிலான கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பது இந்தச் சட்டத்தின் முடிவு. யாரேனும் ஒருவரைப் பலாத்காரமாகத் தடுத்து வைத்திருந்தால், அவ்வாறு செயற்பட்ட குற்றத்திற்காக 7 வருடங்கள் வரையிலான கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று பகிடிவதைக்கு எதிரான சட்டம் கூறுகின்றது.

இவ்வாறு கடுமையான தண்டனைகளை விதித்துள்ள சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்ற போதிலும், சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதையில் எந்தவிதமான தயக்கமுமின்றி சாதாரணமாக ஈடுபடுகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், சட்டவிரோதமான பகிடிவதைச் செயற்பாட்டை பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள் நியாயப்படுத்துகின்றார்கள். இதற்கு சில பழைய மாணவ்களும் ஆதரவான போக்கைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இருந்த போதிலும், உயர்கல்வித்துறை சார்ந்தவர்கள் பகிடிவதையை இல்லாமல் செய்வதற்கு இதயசுத்தியுடன் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு செயற்பட்டிருந்தால் பகிடிவதை நாட்டில் இல்லாதொழிந்திருக்கும் என்று பாதிக்கப்பட்ட மாணவர்களும் அவர்களுடைய பெற்றோரும் கூறுவதைக் காணமுடிகிறது. இவ்வாறான பின்னணியில் இப்போது நீதிமன்றம் இந்த விடயத்தில் தலையிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இந்த அநாகரீகமான செயற்பாடுகளுக்கு நீதிமன்றத்தினால் மட்டுமே முடிவுகட்ட முடியும்.

# பரீட்சையின் பின்னர் ஆர்ப்பரிக்கும் தனியார் கல்வி (டியூஷன்) நிலையங்கள்!

கடந்த எட்டாம் திகதியுடன் க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவடைந்ததை அடுத்து மாணவர்களை உயர்தர வகுப்புகளில் கற்பதற்கான திட்டங்களைத் தீட்டி, கவர்ச்சிகரமான முறையில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுக் கொண்டதைக் கண்ணுற்றபோது, பரீட்சை எழுதி மூச்சுவிடுவதற்குள் மாணவர்களை அழைக்கும் இந்த டியூஷன் கலாசாரத்தை பார்க்கிறபோது சில நாட்களுக்கு முன்னர் முகநூலில் ஒருவர் எழுதியிருந்தமை ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது, க.பொ.த. (சா/த) பரீட்சை எழுதி முடிவதற்குள் உயர்தரம் கற்பதற்கான துண்டுப்பிரசுரங்களை போட்டியிட்டு தனியார் கல்வி நிலையங்கள் வழங்கி வருகின்றன. தயவுசெய்து இந்த மாணவர்களை கட்டுப்படுத்தி குறைந்தது மூன்று மாதங்களுக்காவது தங்களுடைய உடல், உள ஆரோக்கியத்தை, சந்தோஷத்தை மேம்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்குங்கள். ''படி.. படி..'' என்று கூறி இறுதியில் பிழையான வழிகளில் இந்த மாணவர்கள் செல்வதற்குத் தூண்டாதீர்கள். இந்த மாணவர்களின் பெற்றோர்கள் இந்த தனியார் கல்விக்கூட மாயைகளில் வீழ்ந்திடாது உங்கள் பிள்ளைகளை சிறந்த தலைமைத்துவ, ஒழுக்க, சமய, சமூகப் பார்வைகளில் கவனம் செலுத்த உதவிடுங்கள் என்கிற கருத்துப்பட எழுதியிருந்தார்.

கடந்த எட்டாம் திகதி பரீட்சை எழுதிய அந்த பாடசாலையின் வாயிலில் கிழித்தெறியப்பட்ட காகிதத் துண்டுகள் நிறையவே காணப்பட்டன. மாணவர்கள் தங்களுடைய வினாப்பத்திரங்களை கிழித்தெறிந்திருக்கிறார்களோ என்றெண்ணி விசாரித்தபோது அங்கு நின்ற மாணவர்கள் கூறிய விடயம் நான் மேலே எழுதிய விடயத்திற்கு சார்பானதாகவே இருந்தது. அதாவது, பரீட்சை நிலையத்திலிருந்து வெளியே வந்ததும் நூற்றுக்கணக்கான தனியார் கற்கைகள் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை மாணவர்களுக்கு வழங்கியபோது உடனடியாக அதனை வாசிக்காமலே கிழித்து வீசியமைதான் இங்கே கொட்டிக்கிடக்கிற காகிதத் துண்டுகள் என்கிற விடயத்தை அந்த மாணவர்கள் கூறினர்.

உண்மையாகவே இவ்வாண்டு இடம்பெற்ற சாதாரணதரப் பரீட்சையானது மாணவர்கள் நீண்ட நாட்கள் இழுத்தடிக்கப்பட்டு நடைபெற்று முடிந்திருக்கிறது.

மாணவர்களும் பெற்றோர்களும் பாடசாலைகளும் எதிர்கொண்ட கடுமையான பிரயத்தனங்களின் மத்தியிலும் நாட்டின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இப்பரீட்சை மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. மாணவர்கள் கடத்தல், பிள்ளைகளின் உடல் உறுப்புகளை திருடுதல், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள், கொலை, கொள்ளை மற்றும் மாணவர்கள் மற்றும் இளையோரிடையே காணப்படுகின்ற போதைப்பொருள் பாவனை போன்ற பலதரப்பட்ட விடயங்கள் இன்று நாடு முழுவதும் பெற்றோர்கள் மத்தியில் திகிலூட்டப்பட்டு, பொருளாதாரக் கஷ்டங்களுக்கும் மத்தியில் நாளாந்த உணவை உண்பதே மிகவும் கஷ்டமான நிலையிலும் தமது பிள்ளை படிக்க வேண்டும், நல்ல முடிவுகள் கிடைக்க வேண்டும், கட்டிளமைப் பருவத்தில் உள்ள இவர்களை மேற்பார்வை செய்வதும், இவர்களின் நடத்தைக் கோலங்களை கண்காணிப்பதுமான நிலையில், இவ்வாறான இக்கட்டுக்குள் மாட்டிக் கொண்டு தள்ளாடும் பெற்றோர்கள் மத்தியில் பரீட்சை சூடாறுவதற்கு முன்னர் மீண்டும் டியூஷனா என்கிற ஏக்கப்பார்வையே காணப்படுகிறது.

பாடசாலை என்பது மாணவர்கள் கற்கின்ற இடமாகும். ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகள், கல்வி அமைச்சு, பாடத்திட்டம், பாடநூல்கள், மதிய உணவு, ஆடை, இன்னோரன்ன சலுகைகள் அனைத்தும் வழங்கப்பட்டு எந்த ஒரு பிள்ளையும் பல்கலைக்கழகம் வரை இலவசமாகவே கல்வி வழங்கப்பட வேண்டும் என்று அரசு கோடான கோடி ரூபா பணம் செலவு செய்து வரும் நிலையில், இதனை விட்டொதுக்கி குறிப்பிட்ட சில மாணவர்களை தன் கவர்ச்சியான கற்பித்தல்கள் ஊடாக அழைக்கும் தனியார் கல்வி நிலையங்களில் இத்தகைய எதுவுமே இன்றி காணப்படுவதில் மாணவர்கள் எதனைத்தான் பெற்றுக் கொண்டனர்..?

இன்று சாதாரண ஆசிரியர், கல்வியோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்திலுள்ளவர்களும் தனியார் கல்வி நிலையங்களில் பணத்திற்காக கல்வியை விற்கின்றார்கள். ஆனால், இதில் அதியமான விடயம் என்னவென்றால் பட்டதாரியோ, பயிற்றப்பட்ட ஆசிரியரோ இன்றி வாய்வீச்சில் சவால்விடும் ஆசாமிகள் சிலர் பணத்தை உழைப்பதற்கான இலகுவான வழியாக இந்த தனியார் கல்வி நிலையங்களை நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றனர். குடிசைக் கைத்தொழில்போல வீடுகளிலும் அரைகுறையோடு பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்டவர்கூட மாலை நேரங்களில், இராக்காலங்களில் மாணவர்களுக்கு கற்பிக்கின்றனர். இவர்களிடம் அனுப்புவதில் படித்த பெற்றோர்கள் கூட அதிக முனைப்புக் காண்பிப்பதுதான் சிந்திக்கச் செய்கின்றது.

இந்த மாயை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் பரிபூரணமாக தினந்தோறும் கற்றல் - கற்பித்தலில் முழுமையாக ஈடுபடுவதை கண்காணிப்பதும் கடுமையாக்கப்பட வேண்டும். இவை சரியாக நடைபெறாததன் விளைவுதான் பாடசாலைக் கல்வியிலிருந்து முற்றுமுழுதாக நம்பிக்கை இழந்து, தனியார் கல்வியை நாடுகின்ற போக்கு நமது நாட்டில் காணப்படுகின்றது. அது மாத்திரமன்றி, பாடசாலையானது நிறைந்த கட்டுப்பாடுகள் உள்ள நிலையமாகும். ஓலைகளால் அல்லது தகடுகளால் வேயப்பட்ட புழுதி நிறைந்த நெருக்கமான எவ்விதமான வசதிகளுமற்ற கொட்டகைளுக்குள் கற்பிப்பதில் அதிக கவனம் செலுத்தப்படுவதன் மர்மம்தான் என்ன? சொல்லப் போனால் பாடசாலைக்குள் இந்த இறுக்கம் கிடையாது.

ஆசிரியரும் மாணவரும் ஒன்றாக அமர்ந்து தேநீர் அருந்தி கால்மேல் கால்போட்டுக் கொண்டு பேசுகின்ற நிலைமை பாடசாலைகளுக்குள் இல்லை. தனியார் நிலையங்களில் பெண் மாணவிகளோடு சகவாசம் வைத்துக் கொண்டு சுதந்திரமாக உலாவருவதற்கும் பிழையான நடத்தைகளில் ஈடுபடுவதற்கும் சாதகமான சூழ்நிலைகள் இருப்பதற்கு பலமான ஆதாரமாக தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

உண்மையிலேயே பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதைத்தான் இங்கும் கற்பிக்கின்றனர். சில நல்ல ஆசிரியர்கள் என்று டியூஷனில் பெயர் எடுத்தவர்கள் அவர்களுடைய பாடசாலையில் தமது பாடத்தை ஒழுங்கு முறையாக கற்பிப்பதில்லை என்கிற குற்றச்சாட்டு பல வருடங்களாக எம் மத்தியில் இருப்பதை நாமும் அறிவோம். சில ஆசிரியர்கள் தங்களுடைய மாலை நேர வகுப்புக்கு வராவிட்டால் உனது புள்ளிகளைக் குறைத்து சித்தியடையாமல் செய்வேன் என்கிற கருத்தாடல்களும் இடம்பெறும் நிலையில், பாவம் மாணவர்கள் என்னதான் செய்வார்கள்! இந்த டியூஷன் மாயை புற்றுநோயைப் போன்று நீண்டு ஆழமாக வளர்ந்துவிட்டது. இதனைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால் அதன் முடிவு பெற்றோரிடம்தான் உள்ளது. இன்றைய யுகம் போட்டி நிறைந்ததாக கணப்படுவதையும் பெற்றோர்களே தமது பிள்ளைகளை தனியார் கல்விக்கூடங்களுக்கு அழைத்துச் சென்று முடிந்த கையோடு அழைத்து வருவதையும் பார்க்கின்றோம். இதனை பிரதேச ரீதியாக சபைகள், சமயத் தலங்கள் மற்றும் முற்போக்கான அமைப்புகள் போன்றவற்றின் மேற்பார்வைகளுடன் கூடிய கட்டுப்பாடுகள் காணப்படுமாக இருந்தால் பல்வேறு நெருக்குவாரங்களிலிருந்தும் விலகிக்கொள்ளலாம்.

இன்று போதைவஸ்துப் பாவனை இளையோரிடம் அதிகரித்துக் காணப்படுவதாக அண்மைய காலங்களில் அறியப்பட்டு வருவதை பத்திரிகை மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்தப் பாவனையின் மெத்தனப்போக்குகளுக்கு கிரீடமாக தனியார் கல்விக் கூடங்களும் காணப்படுகின்றன. அங்கு இவை இடம்பெறாவிட்டாலும் தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு ஆண் நண்பர்களோடு பெண் பிள்ளைகள் சென்று பிழையான நடத்தைகளில் ஈடுபடுதல், கூடாத செயற்பாடுகளை செய்யத் தூண்டக்கூடிய வகையில் இடம்பெறும் களியாட்ட நிகழ்வுகளில் பங்குபற்றல், சட்டத்திற்கு புறம்பான விடயங்களில் பங்குபற்றல் போன்ற பிழையான நடத்தைகளுக்கு இவர்கள் தனியாகவும், கூட்டாகவும் தூரப்பிரதேசங்களுக்கு செல்லுதல் என்பன கூடாத பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதற்கு சான்றாக அமைகின்றன.



இன்று வீதிச் சட்டங்களை மதிக்காமல், பாடசாலை மாணவர்கள் ஒரு மோட்டார் சைக்களில் மூன்று அல்லது நான்கு பேர் மிகவும் வேகமாக ஓட்டிச் செல்வது, தலைக்கவசம் அணியாமல் செல்வது போன்ற பிழையான வழிகாட்டல்களை மேற்கொள்வதன் காரணமாக அதிகமான வீதி விபத்துகளில் தங்களுடைய உயிரையும் இழந்த சம்பவங்களை நாம் நிறையவே பார்த்திருக்கிறோம். இந்த சாதாரணதர பரீட்சை முடிவடைந்த கையுடன் உங்களுடைய பிள்ளைகளை ஒவ்வொரு பெற்றோரும் பரீட்சை நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று அழைத்துச் செல்லுங்கள்.

ஏனெனில், இவர்கள் பிழையான நடத்தைகளிலும் கேளிக்கை விளையாட்டிலும் ஈடுபட வாய்ப்புள்ளது. இதன் காரணமாக வீணான பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகள் ஏற்படும் என்பதைக் கவனத்திற்கொண்டு பல பாடசாலைகள் ஒலிபெருக்கி மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக அறிவிப்புகளைச் செய்திருந்தனர்.

இதனால் பெண் பிள்ளைகள் உடனடியாக வீடு சென்றனர். ஆனால், பல ஆண் மாணவர்கள் தங்களுடைய வெள்ளை ஆடைகளில் வண்ணங்களை வீசிக் கொண்டு மோட்டார் வண்டியில் வேகமாகச் செல்வதும், கூடிக்கூடி சப்தமிட்டு ஆர்ப்பரிப்பதுமான விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சில பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் இந்த மாணவர்களை பரீட்சை முடிவடைந்ததும் அழைத்து நல்லுபதேசம் செய்திருக்கின்றனர். பிழையான வழிகாட்டல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தனர்.

மாணவர்களை இவர்களுடைய பெற்றோரின் அனுமதியுடன் சுற்றுலா செல்வது, தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்தும் கருத்தரங்குகளை மேற்கொள்வது, அடுத்த இலக்கை நோக்கிய நகர்வில் இவர்களை எப்படி நோக்கச் செய்வது போன்றவற்றில் அதிகூடிய கவனம் செலுத்தி ஆறுதல் அடையச் செய்யும் நோக்கில் ஆலோசனை, வழிகாட்டல்களை மேற்கொள்வதும் அவசியமான ஒன்றாகும்.

மாணவர்களின் கவனம் திசை திருப்பப்படுவதற்கு முன்னர் இவற்றை உரியமுறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும்.

இன்றைய நாட்களில் பொருளாதாரத்தில் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்ற நிலையில், டியூஷனுக்காக பல ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து இறுதியில் நாம் எதிர்பார்த்த பலனும் கிடைக்க வில்லையாயின் இந்த கஷ்டத்தையும், நஷ்டத்தையும் எவ்வாறு தாங்குவது? பிள்ளையின் படிப்புக்காக ஆசிரியர் ஒருவர் தான் குடியிருந்த வீட்டையே விற்றுப் படிப்பித்தார். இறுதியில் அந்த மகனால் தனது பெற்றோருக்கு சொந்தமாக இருப்பதற்கு இடமின்றி இன்றுவரையிலும் வாடகை வீடுகளில் இருந்துவரும் நிலையில், மகனோ தனது பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொண்டு மறைந்து வாழ்ந்து வரும் நிலைமையும் காணப்படுகின்றது. எது எப்படியோ, எதிர்வரும் சனிக்கிழமை உயர்தரப் பரீட்சைக்குரிய டியூஷன் மூலம் பல ஆயிரங்களைப் பறிக்கும் இந்தக் கூட்டத்திலிருந்து தங்களுடைய பிள்ளைகளைப் பாதுகாத்து சரியான வழியில் தனது பிள்ளை செல்வதை உறுதிப்படுத்தும் பெற்றோராகவும் மேற்பார்வையாளராகவும் ஒவ்வொரு பெற்றோரும் மாறுவதே சரியான மார்க்கம் என திடமாகக் கூறலாம்.

(அட்டாளைச்சேனை எஸ்.எல்.மன்சூர்)

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1925 – சார்ல்ஸ் ஜென்கின்ஸ், படங்களையும் ஒலியையும் ஒரே நேரத்தில் அனுப்பும் முறையை முதன்முறையாக வெற்றிகரமாகப் பரிசோதித்தார். 10 நிமிட அசையும் படத்தை 5 மைல்கள் தூரத்திற்கு அனுப்பினார்.
- 1931 – இலங்கை அரசாங்க சபைக்கான முதலாவது தேர்தல் இடம்பெற்றது.
- 1934 – ஹிட்லரும் முசோலினியும் வெனிஸில் சந்தித்தனர்.
- 1948 – ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான தமிழிலக்கிய மறுமலர்ச்சி சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 – மலாயா தொழிற்சங்கங்களின் சம்மேளனம் மலேசியாவில் தடைசெய்யப்பட்டது.
- 1983 – 'பயனியர்-10' நெப்டியூனின் சுற்றுவட்டத்தை எட்டி, மத்திய சூரிய குடும்பத்தைத் தாண்டிய முதலாவது விண்கப்பல் என்ற சாதனையை எட்டியது.
- 2002 – ஏவுகணை எதிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து ஐக்கிய அமெரிக்கா விலகியது.
- 2006 – நியூ ஹரைசன்ஸ் விண்கலம் தனது பயண வழியில் 101,867 கி.மீ. தூரத்தில் '132524 - ஏ.பி.எல்.' என்ற சிறுகோளை சந்தித்து அதன் படத்தைப் பூமிக்கு அனுப்பியது.
- 2007 – திருமலையில் 'மேர்சி கோப்ஸ்' என்னும் பன்னாட்டுத் தன்னார்வல அமைப்பின் பிலிப்பைன்ஸ் பணியாளர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டார்.
- 2010 – '25143 - இத்தொகாவா' என்ற சிறுகோளில் இருந்து மண் மாதிரிகளுடன் 'அயபூசா' என்ற ஜப்பானிய விண்கலம் பூமிக்குத் திரும்பியது.

# இனம், மதம் கடந்து சட்டம் சமமான முறையில் பிரயோகிக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும்



நாட்டில் தனிமனிதர்களும் சமூகங்களும் அசமத்துவமான முறையில் நடத்தப்படுகிறார்கள் என்ற உணர்வை வலுப்படுத்தும் இன்னொரு சம்பவமாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது அமைந்திருக்கிறது. பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்வதற்கு இடையூறு விளைவித்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

பொது மைதானம் ஒன்றில் பொன்னம்பலம் தனது ஆதரவாளர்களுடன் நடத்திய கூட்டத்துக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் சிவில் உடையில் வந்த இருவர் தங்களை அடையாளப்படுத்த மறுத்ததையடுத்து அவர்களுக்கும் பொன்னம்பலத்துக்கும் இடையில் வாக்குவாதம் மூண்டது. இந்த சம்பவம் தாங்கள் வேறுபட்ட முறையில் நடத்தப்படுவதாக தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள உணர்வை மீளக் கிளறியிருக்கிறது.

நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுவது வழமையான ஒரு நடைமுறை. தங்களை அவமதிப்பதாகவும் அச்சுறுத்துவதாகவும் அந்த நடைமுறை இருப்பதாக அந்த மக்கள் கருதுகிறார்கள்.

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட துப்பாக்கிகளுடனும் கெமராக்களுடனும் சீருடையில் படையினர் பெருமளவில் பிரசன்னமாக இருப்பது அந்த மக்கள் மத்தியில் ஒரு அநாதரவான உணர்வை ஏற்படுத்துகிறது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் அக்கறையாக இருந்தால் அவர்களின் மனங்களை வென்றெடுக்கவேண்டிய அவசியத்தை உணர்த்தும் அறிகுறியாக இந்த நிலைமை இருக்கிறது.

நாட்டின் ஏனைய பாகங்களில் வாழும் மக்களை விடவும் வேறுபட்ட முறையில் வடக்கு, கிழக்கு மக்களை நடத்தவேண்டாம் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது. அந்த மக்களும் ஏனைய மக்களைப் போன்று சமத்துவமான உரிமைகளுக்கு உரித்துடையவர்களே.

பாராளுமன்றத்தில் உள்ள ஏனைய சமூகங்களின் பிரதிநிதிகள் தவறாக நடந்துகொள்கின்றபோதிலும் மரியாதையாக நடத்தப்படும் அதேவேளை சிறுபான்மை இனத்தவர்களான தமிழ்ச் சமூகத்தின் ஒரு தலைவர் கைதுசெய்யப்படுவது இலங்கையின் அரசியல் கட்டமைப்புக்கு நீண்டகாலமாக பெரும் பாதிப்பாக அமைந்த இனத்துவ பரிமாணத்தை மீண்டும் வெளிக்காட்டி நிற்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலத்தின் கைது பாரபட்சமான முறையில் பிரயோகிக்கப்படுகிறது என்பதன் வெளிப்பாடாகும். இது ஒரு நாடு ஒரு சட்டமா அல்லது ஒரு நாடு இரு சட்டங்களா என்ற கேள்வியைக் கிளப்புகிறது.

உலகின் முதன்மையான மனித உரிமைகள் சாதனமான குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை (International Covenant on Civil and Political Rights ICCPR) நடைமுறைப் படுத்துவதற்கென்று கொண்டுவரப்பட்ட சட்டத்தை அரசாங்கம் தவறாக பயன்படுத்திவருகின்ற போக்கில் இந்த தோற்றப்பாட்டை காணக்கூடியதாக இருக்கிறது. அதாவது பெரும்பான்மை இனத்தவர்களின் உணர்வுகளை புண்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக இந்த சட்டம் பயன்படுத்தப்படுகின்ற அளவுக்கு சிறுபான்மை சமூகங்களின் உணர்வுகளை புண்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக பயன்படுத்தப்படுவதில்லை.

சமூக வாழ்வின் சகல அம்சங்களிலும் பாரபட்சம் காட்டப்படாமல் சகலரும்




சமத்துவமான முறையில் நடத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தத்துக்கு இசைவான முறையில் சமத்துவம் மற்றும் பன்மைத்துவ ஆணைக்குழு (Equality and Pluralism Commission) ஒன்றை நிறுவுமாறு அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துமாறும் அரசியலமைப்பின் பிரகாரம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பரவலாக்கப்படக்கூடியதாக அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறும் இன, மத அடிப்படையில் அரச அதிகாரிகள் அடாத்தான முறையில் நடந்து கொள்ளும் சாத்தியத்தைக் குறைப்பதற்கு சகல சமூகங்களையும் அரவணைக்கும் அணுகுமுறையுடன் சேவைகளை வழங்குவதற்கும் பன்மைத்துவ பண்புகளை விளங்கிக்கொள்வதற்கும் பொலிஸார் உட்பட அரசாங்க அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குமாறும் அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

அத்தகைய நிறுவன ரீதியான ஒரு ஏற்பாட்டின் மூலம் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையை அதிகரிக்க முடியும் என்பதுடன் வெளியுலகில் எமது நாட்டின் விழுமியங்களை பிரதிபலிக்கக்கூடியதாகவும் இருக்கும். இனம், மதம் கடந்து சட்டம் சமமான முறையில் பிரயோகிக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.



உடப்பு திரௌபதையம்மன் ஆலயத்தின் வருடாந்த கொடியேற்றம் ஞாயிற்றுக்கிழமை (11) இரவு இடம்பெற்றது. அன்று கரகம் எடுத்தல் விசேட பூஜையும் நடைபெற்றது. இதன்போது பக்த அடியார்கள் பலர் கலந்துகொண்டனர். பதினெட்டு நாட்கள் நடைபெறவுள்ள மகோற்சவத்தில் தீமிதிப்பு 28ஆம் திகதி நடைபெறும். (படங்கள் :உடப்பு செய்தியாளர்)

# வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடம் மகநெகும ஊழியர்கள் கோரிக்கை



மகநெகும நிறுவன ஊழியர்களின் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் மகநெகும கட்டுமான மற்றும் இயந்திர உபகரணங்கள் நிறுவன ஊழியர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மகநெகும கட்டுமான மற்றும் இயந்திர உபகரணங்கள் நிறுவன ஊழியர்கள் குழுவொன்று கடந்த 09 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து கலந்துரையாடியது. இதன்போதே அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

பொருளாதார நெருக்கடியை அடுத்து அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மார்ச் 23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், கலைக்கப்பட்ட மகநெகும நிறுவனத்தில் பணிபுரியும் பல ஊழியர்கள் தங்கள் வேலையை இழக்கும் அபாயத்தில் உள்ளதாக தெரியவருகிறது. மகநெகும நிறுவனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக இருப்பதால், ஊழியர்களின் வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்த ஆவன செய்யவேண்டும்.

நிறுவன கலைப்பு யோசனையின் விளைவாக, 820 ஊழியர்களுள் 649 பேர் சுயவிருப்ப ஓய்வு மூலம் ஓய்வு பெற்றுள்ளனர். என்றாலும், ஏறக்குறைய 150க்கும் மேற்பட்ட ஊழியர்கள், தொழில் தேவைப்பாடு, புதிய வேலையொன்றை தேட இயலாமை, வங்கிக் கடன் போன்ற நியாய மான காரணங்களுக்காக சேவையில் இருந்து விலகுவதில்லை என முடிவு செய்துள்ளனர்.


ஒட்டுமொத்த ஊழியர்களும் பணியாற்றும் போது மாதாந்த சம்பளம் 60 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தாலும் தற்போது 9 மில்லியன் ரூபாவே செலவிட வேண்டியுள்ளது.

நிறுவனத்தின் நிலையான வைப்புத் தொகையான 1550 மில்லியன் ரூபாவிலிருந்து கிடைக்கப்பெறும் மாதாந்த வட்டி மற்றும் ஏனைய வருமானங்களிலிருந்து கிடைக்கப்பெறும் 30 மில்லியன் ரூபாவின் மூலம் இதனை செலுத்த முடியும்.

எனவே தமது ஊழியர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்து தருமாறும் எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்வரும் நாட்களில் இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்து இப்பிரச்சினைக்கு சாதகமான பதிலை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார்.

# வவுனியா பல்கலைக்கழகத்தில் உயர்தர சான்றிதழ் கற்கைநெறி



(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தில் அரசியலில் பெண்களை வலுவூட்டல் என்ற உயர்தர சான்றிதழ் கற்கைநெறி வவுனியா பல்கலைக்கழகத்தின் சகவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் கற்கை நெறியின் இணைப்பாளர் ச.மதிவதனி தலைமையில் நேற்றுமுன்தினம் (11) ஆரம்பமாகியது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக் கல்வி நிலையம் ஊடாக முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் கற்கை நெறியை பயில்வதற்காக பெண்கள் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக செட்டிகுளம் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செந்தில்குமரன் சுமித்ரா, சமூக செயற்பாட்டாளரும் வலுவூட்டுநருமான சரவணன்முத்து அறிவழகன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் இயக்குநர் சபையின் உறுப்பினர் ஜெயரஞ்சன் யோகராஜ், வவுனியா பல்கலைக்கழக தொடர் தொலைக் கல்வி நிலைய பணிப்பாளர் ஜூட் லியோன், தொழில் வழிகாட்டல் ஆலோசகர் சசிதரன், கனரா பாலர் பாடசாலை இயக்குநர் அருட் சகோதரி குளோரியா ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# களுத்துறை பிரதேசத்தில் 12 மணிநேர நீர்வெட்டு


(பேருவளை நிருபர்)

அளுத்கம, மத்துகம, அகலவத்த ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தில் அத்தியாவசிய விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் நாளை 14ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை 12 மணிநேர நீர் விநியோகத்தடை பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இதற்கிணங்கவாதுவ, வஸ்கடுவ, பொத்துபிட்டிய, களுத்துறை வடக்கு, களுத்துறை தெற்கு, கட்டுக்குருந்தை, நாகொட, பயாகல, மக்கொனை, போம்புவல, அளுத்கம, தர்காநகர், பெந்தோட்டை, களுவாமோதர, மொரகல்ல, பிளம்னாவத்த ஆகிய பகுதிகளிலேயே நீர் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காம பாதயாத்திரை



நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரையான பாதயாத்திரை பூஜை வழிபாடுகளுடன் நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமாகியது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் தலைமையில் செல்லவுள்ள பாதயாத்திரையை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மனுர சமன் பெரேரா, வடமாகாண பணிப்பாளர் காமினி, யாழ். மாவட்ட பணிப்பாளர் வினோதினி சிறிமேனன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். இந்நிலையில் யாத்திரிகர்கள் உகந்தை முருகன் ஆலயம் சென்றதும் அங்கிருந்து சுமார் 300 இளைஞர்கள், யுவதிகள் பாதயாத்திரையில் இணைந்து கொள்வர்.

யாத்திரிகர்களுக்கு கருகம்பனை இந்து இளைஞர் கழகம் சிற்றுண்டிகளை வழங்கியதுடன் சந்நிதியான் ஆச்சிரமம் போக்குவரத்து செலவுகளை வழங்கியது.


# கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அமுத விழா



(அஷ்ரப் ஏ. சமத்)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அமுத விழாவின் இறுதி நாள் நிகழ்வு ஞயிற்றுக்கிழமை (11) கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது.இதன்போது அமுத விழா ஆய்வு நூலும் சங்க வரலாறு 80 நூல்கள் வெளியீடும் விவாத அரங்கும் கிளிநொச்சி பிரசாந்தனி நர்த்தன நாட்டிய நாடகமும் இடம்பெற்றது. கொழும்பு சட்டபீட மாணவர்களின் ''இளைஞர்கள் தமிழர் மரபுரிமைகளை பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்கின்றார்களா ஆம் - இல்லை'' என்ற விவாதம் இடம்பெற்றது. நடுவராக பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் கடமையாற்றினார்.இதன்போது நூலின் பிரதிகள் அதிதிகளுக்கு வழங்கப்பட்டன. நூல் ஆய்வுரையை கலாநிதி க. இராகுபரன் மற்றும் பேராசிரியர் வ. மகேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# பிரவுன்சிக், எமலின் தோட்ட வீதியை புனரமைக்க கோரிக்கை



(எஸ்.கணேசன்)

பிரவுன்சிக், எமலின் தோட்ட வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனால் அவ்வீதியை பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா, பிரவுன்சிக் தோட்டத்தில் எமலின் பிரிவுக்கு செல்வதற்கு சாமிமலை ஓயா ஊடாக 600 இலட்சம் ரூபா செலவில் பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் மேற்குறித்த வீதி சேதமடைந்துள்ளதால் அப்பாலத்தின் பலன் மக்களுக்கு கிட்டவில்லை எனவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதிக்கு வருவதற்கான பிரவுன்சிக், எமலின் தோட்ட வீதியை புனரமைப்பதற்கு பல வருடங்களாகியும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே மேற்படி வீதியை புனரமைக்க சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோருகின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.06.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5142
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,343,808.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 5 2 2 4 3 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3384
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,953,610.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 37 47 53 54

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1597
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,309,813.12
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 4 7 9 5 3 7

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1172
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,489,311.60
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 14 30 37 63

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 451
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,311,025.40
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 11 34 42 62
விசேட இலக்கினம் ரிஷபம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1490
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 328,734,662.00
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 03 29 61 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# மாகாண சபைக்கான ஆலோசனைக் குழுவை அமைக்கும் செயல் எங்களது நிலைப்பாட்டிற்கு குந்தகத்தையே விளைவிக்கும்

## ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி

ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டு அல்லது முன்வைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைக்கான ஆலோசனைக் குழுவொன்றை அமைக்கும் ஏற்பாடானது, ஏற்கனவே நாங்கள் கோரிக்கை வைத்திருக்கும், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு குந்தகத்தை விளைவிப்பதாக அமைகிறது - என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அரசியல் யாப்பிலே ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்து, மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் அதற்கான திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்ற அனுமதியைப் பெற்று மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு எமது கோரிக்கை அமைந்திருந்தது. அதை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டு, அந்த மாகாண சபையில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிலைநிறுத்துவதற்கான சட்ட வரைபுகளை தான் ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த சட்ட வரைபுகளோடு தேர்தல் திருத்தச் சட்டத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற்று மாகாண சபைகளில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிறுத்தி, மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால், இதுவரைக்கும் அந்த விடயங்கள் தொடர்பான தெளிவான கருத்துகள் எதுவும் ஜனாதிபதியால் கூறப்படவில்லை.

இந்த நிலையிலேயே ஆலோசனைக்குழுவொன்றை அமைத்து மாகாண சபையை வழிநடத்துவதற்காக ஜனாதிபதி எடுக்கின்ற முயற்சியும், அதை எமது தமிழர் தரப்பினரே அரசியல் கோரிக்கையாக முன்வைத்திருப்பதும் கவலையளிக்கிறது.

ஜனாதிபதியின் மாகாண சபை வழிநடத்தல் குழு என்பது அவரால் அமைக்கப்படவேண்டிய ஒன்று. அதனை நாங்கள் வலிந்து கேட்பது அவசியமற்றது. அது ஏற்கனவே ஒரு நிர்வாகம் சம்பந்தப்பட விடயம். நாங்கள் கேட்பது அரசியல் நிலைப்பாடு மட்டுமே. அதாவது, மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும், பறிக்கப்பட்ட அதிகாரங்களோடு ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது ஓர் அரசியல் கோரிக்கை.



ஆகவே, நாங்கள் இந்த அரசியல் கோரிக்கைக்கு புறம்பான ஒரு நிர்வாக ரீதியான ஆலோசனைச் சபையை அமைக்கும் விடயத்தை கோரிக்கையாக, அதாவது, அரசியல் கோரிக்கையாக முன்வைப்பது அபத்தமானதாகும். அது ஜனாதிபதியின் தேவை கருதி எடுக்கவேண்டிய நடவடிக்கை. ஆகவே, நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டில் இருக்க வேண்டியதில் அனைத்து தமிழ்த் தரப்பும் உறுதியாக இருக்க வேண்டும்.

மாறாக, தனித்து செயற்பட முற்படுகின்றபோது எமது பிரதான கோரிக்கையான அதிகாரப்பகிர்வு, மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துதல் என்ற விடயங்களுக்கு இவை குந்தகம் விளைவிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி, தேர்தல்களைப் பிற்போடுவதற்கு இதைப் பயன்படுத்துகின்ற அபாய சூழ்நிலை இப்போது எழுந்திருக்கிறது. இதற்கு சம்பந்தப்பட்ட அரசியல் தரப்பினர் பொறுப்புக் கூறவேண்டும் என்பது எங்களது நிலைப்பாடு – என்றுள்ளது.

# தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான யாழ். மாவட்ட செயலக தீர்மானம்

## சைவ மகா சபை வரவேற்பு

யாழ். நிருபர்

சிறார்களின் ஆன்மீக உளநல மேம்பாட்டை ஏற்படுத்தும் தனியார் கல்வி நிறுவனங்களை வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் இடைநிறுத்த யாழ்ப்பாண மாவட்ட செயலகம் தீர்மானித்ததை சைவ மகா சபை வரவேற்றுள்ளது.

சைவ மகா சபை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில்,

7 நாள் நெருக்கீட்டைக் குறைத்து இனிமையான இளம் பராயத்தை சிறார்களுக்கு வழங்கவும் எதிர்பார்க்கும் வெள்ளி மற்றும் ஞாயிறு தனியார் வகுப்புகளை நிறுத்தும் யாழ். அரச அதிபர் சிவபாலசுந்தரன் தலைமையில் பல்துறைசார்ந்தோர் எடுத்த தீர்மானம் காலத்தின் தேவை கருதிய மிக முக்கியமான ஒன்றாகும்.

மிகச்சிறந்த தீர்மானத்தை செயற்படுத்த முன்வந்த யாழ். அரச அதிபருக்கும் கல்வி நிர்வாக உளவளத்துணை சிறுவர் பாதுகாப்புத் தரப்பினருக்கும் பாராட்டுகளும் - நன்றிகளும் உரித்தாகுக. இதனைச் செயற்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்கும் தனியார் கல்விப்புல தரப்பினரும் பாராட்டுக்குரியவர்களே.

மேற்படி தீர்மானம் பிள்ளைகளின் ஓய்வு, ஆன்மீக செயற்பாடுகள், குடும்பத்துடன் செலவிடல், உளநலம் என்பவற்றில் இம்முடிவு மிகுந்த பங்களிப்பைச் செய்யுமெனவும் மாவட்டத்தில் பாரிய நெருக்கடியாக உருவெடுத்துவரும் இளையோரின் போதைப்பொருள் பாவனை, விபத்துகள், தற்கொலைகளைத் தடுக்க இது பேருதவியாக அமையுமெனவும் நாம் நம்புகின்றோம்.

மேலும் 7நாட்களும் நெருக்கீட்டுடன் கல்வியை மட்டும் திணிப்பாக உட்செலுத்தினால் பிள்ளைக்கு ஏற்படும் மனப்பிறழ்வுகள் தொடர்பாகவும் மகிழ்ச்சியான இளம்பராயத்தின் அவசியம், உத்திகள் தொடர்பாகவும் பெற்றோருக்கு தொடர் விழிப்புணர்வு நடத்துவதிலும் அறநெறிக் கல்வியில் எமது பங்களிப்பை வழங்குவதற்கும் எம்மாலான பங்களிப்பை நல்கத் தயாராகவுள்ளோம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்துகின்றோம்.

அனைத்துத்துறை சார்ந்தோரும் இத்திட்டத்தை அமுல்படுத்த பூரண ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் வளமான - ஒழுக்க விழுமியமிக்க - சிறந்த எதிர்கால சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதில் ஐயமில்லை. இதேநேரம், பெற்றோர்கள் இத்திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கோவில்களில் வெள்ளி மாலைவேளையில் குறித்த நேரத்தில் பூசை, சிறார்கள் பங்குகொள்ளும் வகையிலான கூட்டுப்பிரார்த்தனை, வெள்ளி மற்றும் ஞாயிறு காலை அறநெறி வகுப்புகளை சிறப்பான முறையில் முன்னெடுக்கவும் பாடசாலைகள் சமய ஆசிரியர் ஊடாக பிள்ளைகள் ஆன்மீக நடவடிக்கைகளில் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களிலல் ஈடுபடுவதை கண்காணிக்கும் பொறிமுறையை செயற்படுத்தவும் இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகின்றோம்.

இதற்காக உழைக்கும் மாவட்ட செயலர் உட்பட அனைத்து துறைசார் வல்லுநர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் சைவத்தமிழ் மக்கள் சார்பாக நன்றியறிதலை மீண்டும் வெளிப்படுத்துவதுடன் இறை சிவனின் அருளாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம் – என்றுள்ளது.

# கிளிநொச்சியில் எதிர்வரும் 18ஆம் திகதி ஈழத்து திரைப்படம் ‘சபா’

மு. தமிழ்ச்செல்வன்




ஈழத்துக் கலைஞர்களின் உருவாகத்திலும் நடிப்பிலும் வெளிவந்துள்ள ‘சபா’ திரைப்படம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (18ஆம் திகதி) திரையிடப்படவுள்ளதென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

‘சபா’ திரைப்படத்தின் காட்சிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி, 6 மணி, 8 மணி காட்சிகளாக கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் திரையிடப்படவுள்ளது.

இந்திய சினிமாவுக்கு இணையாக ஒரு ஈழத்து சினிமாவை உருவாக்கிவிட வேண்டும் என்ற எமது நீண்டநாள் அவா ஓட்டத்தில் அதற்கு கிட்டவாக என்றாலும் ஒரு சினிமாவை படைத்துவிட்டோம் என்ற மன நிம்மதியில் எமது ‘சபா’ திரைப்படத்தைத் திரையிடுகின்றோம். எனவே, ஈழத்துக் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களின் படைப்புகள் மேலும மேலும் வளர பொதுமக்கள் தங்களின் ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் திரைப்படக் குழுவினர் கோரியுள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் (11) ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 09 அட்டைகளில் 90 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதா கவும், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் மீட்கப்பட்ட மாத்திரைகளையும் கைதுசெய்யப்பட்ட நபரையும் ஒப்படைத் துள்ளதாகவும் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

# முதலுதவிச்சங்க தொண்டர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு உதவிகள்



சாவகச்சேரி நிருபர்

இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமய தொண்டர் சபையின் தொண்டர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக அண்மையில் விசுவமடுவில் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரான்ஸில் கராத்தே தேசிய பாடசாலையின் பிரதம ஆசிரியர் சுரேஸ்குமாரின் புதல்வி றிக்சிதாவின் 7ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மேற்படி உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமய தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் மற்றும் மகளிர் பிரிவுப் பொறுப்பாசிரியர் திருமதி ச.கேதீஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பேராதனை பல்கலைக்கழகம் மக்கள் பார்வைக்கு திறப்பு

கண்டி செய்தியாளர்

பேராதனை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 80 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு எதிர் ஸ்ரீவரும் ஜூலை மாதம் முதலாம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படவுள்ளது.

இயற்கை சுற்றாடலும், இயறகை வனப்பும் நிறைந்த பாரிய நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் தென்கிழக்காசியாவில் உள்ள பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இருப்பதுடன் சர்வதேச ரீதியில் பேசப்பட்டு வரும் ஒரு பல்கலைக்கழகமாகும்.

பல்வேறு வளங்களும் பல்வேறு பீடங்களும் அதற்கான கட்டிடங்களும் ஒரே பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கையின் ஒரே பல்கலைக்கழகம் என்று கூறும் அளவு அது வியாபித்துள்ளது. ஆசியாவில் உள்ள மிகப்பெரிய வாசிகசாலை கூட இங்கு அமைந்துள்ளது.

இதனை ஆரம்பித்து 80 வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதியை ‘ஓபன்டே ’ எனக் குறிப்பிட்டு பொதுமக்கள் பார்வைக்காக திறந்து விடப்பட உள்ளது என பல்கலைக்கழக பதில் உபவேந்தரும் ஊடக பேச்சாளருமான ட்ரஸ் மதுஜித் தெரிவித்தார்.

# மாடுகளை கடத்திய மூன்று பேர் கைது

கண்டி செய்தியாளர்

போலி அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி 18 மாடுகளை லொறியொன்றில் ஏற்றிச்சென்ற மூவர் அலவத்துகொடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கண்டி - மாத்தளை பிரதான வீதியில் லொறி நிறுத்தப்பட்டு பரிசோதிக்கப்ட்டபோதே அதில் 18 மாடுகள் இருந்ததாகவும் அனுமதிப்பத்திரம் போலியாக இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியைச் சந்தேகத்தில் பரிசோதித்த போது மன்னார், முருங்கன் பிரதேசத்தில் இருந்து பேருவளை பிரதேசத்திற்கு மாடுகளை ஏற்றிச் செல்லவே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமையும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அலவத்துகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# உக்குவளை பாடசாலைகளின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு

## இரு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்க ஆளுநர் பணிப்பு

உக்குவளை செய்தியாளர்



மாத்தளை கல்வி வலயத்துக்குட்பட்ட உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி மற்றும் அதன் அருகிலமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ தேசிய பாடசாலைகளுக் கிடையிலான ஹமீதியா கல்லூரிக்குரிய காணிப் பிரச்சினை விவகாரம் தொடர்பாக ஹமீதியா கல்லூரி அபிவிருத்திக் குழு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகேயின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதை யடுத்து அவர் வலயக் கல்வி அதிகாரி மேனக ஹேரத்திடம் இவ்விவகாரம் குறித்து இரு வாரங்களுக்குள் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதுகுறித்து குரீவெல ஹமீதியா கல்லூரி அபிவிருத்திக்குழுச் செயலாளர் எம்.எம். சலீம் தெரிவிக்கையில்,

இக்கல்லூரி அமைந்துள்ள காணியில் இருபது வகுப்பறைகளைக் கொண்ட இருமாடி வசதிகொண்ட கட்டடமொன்றை அமைக்க உலக வங்கி வழங்கிய சுமார் ஒருகோடி 90 இலட்சம் நிதி கல்வித் திணைக்களத்தினூடாக கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் இக்கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்றது.

கட்டடம் அமைக்கும் பணிகளை ஆரம்பித்த போது அருகிலமைந்த குறிப்பிட்ட சிங்களப் பாடசாலை நிர்வாகம் குறிப்பிட்ட காணி தமது பாடசாலைக்குரியதாக போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து மாத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்தது. இதனையடுத்து பொலிஸாரும் மாத்தளை வலயக் கல்வி அதிகாரிகளும் இப்பாடசாலை நிர்வாகங்களைச் சந்தித்து கட்டடப் பணிகளை இடைநிறுத்தச் செய்திருந்தனர்.

இவ்விவகாரம் குறித்து எமது பாடசாலை நிர்வாகம், மாத்தளை வலயக் கல்விக் காரியாலயம், அப்போதைய மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, கண்டி பொதுமக்கள் புகார்களுக்கான பிரிவு மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தும் எதுவித பயனும் கிட்டவில்லை. இந்நிலையில், குறிப்பிடப்பட்ட கட்டடம் அமைக்க முடியாமையினால் கட்டடம் அமைக்கக் கிடைக்கப்பெற்ற குறிப்பிட்ட நிதி திரும்பப் பெறப்பட்டதாகத் தெரிவித்த அபிவிருத்திக் குழுச் செயலாளர், குறிப்பிட்ட காணி இக்கல்லூரிக்கு இங்கு வாழ்ந்த ஹமீட் என்பவரால் நன்கொடையாக வழங்கப்பட்டதாகும் இதுகுறித்த சரியான முழுமையான ஆதாரங்கள் பல எமது பாடசாலையில் உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

அவற்றைச் சமர்ப்பித்தும் எமது பாடசாலைக்கு நியாயம் கிடைக்காமையானது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பக்கச்சார்பான - அசமந்தப் போக்குச் செயற்பாடுகள் குறித்து வருந்துகிறோம் . இப்பாடசாலைக் காணியை போலியான ஆதாரங்களைச் சமர்ப்பித்து குறிப்பிட்ட பாடசாலை நிர்வாகம் பாடசாலை வசமாக்கிக் கொள்ளச் செய்யும் ஏற்பாடென ஊகிக்க முடிகிறது. எமது கல்லூரி மாத்தளை மாவட்டத்தில் கல்வித்துறையில் பெரும் வளர்ச்சியடைந்து வருகிறது.

இந்நிலையில், நாமறிந்த வகையில் சுமார் நாற்பது வருட காலங்களாக இந்தக் காணிப் பிரச்சினை இழுபறி நிலையிலிருந்து வரும் நிலையில், எமது கடைசி முயற்சியாக தற்போதைய இவ்விவகாரத்தை ஆளுநர் கமகேயின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். இவ்விவகாரத்தில் இவர் மூலமாகவாவது எமது கல்லூரிக்கு காணிக்கு நியாயம் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம் - என்றார்.

# நபரொருவரைத் தாக்கி பணம், கைபேசி கொள்ளை

## சந்தேகத்தில் எழுவர் கைது

கண்டி செய்தியாளர்

அக்குறணைப் பிரதேசத்தில் காணி ஒன்றை குத்தகைக்காகப் பெற்று அதில் வசித்த ஒருவரை தாக்கி அவரிடமிருந்த சுமார் நான்கு இலட்சம் ரூபா பணத்தையும் பெறுமதி மிக்க கையடக்கத் தொலைபேசி ஒன்றையும் களவாடியதாக அளவத்துகொடை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அக்குறணைப் பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி காணி இரண்டரைப் பேர்ச்சஸ் பரப்புடையது என்றும் அதன் உரிமையாளர்கள் மூவர் இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினம் ஒரு குழுவினர் வந்து குத்தகைக்குப் பெற்று அதில் குடியிருந்தவரைத் தாக்கி அவரிடமிருந்த நான்கு இலட்சத்து ஐயாயிரம் ரூபா பணம் மற்றும் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி என்பவற்றைக் கொள்ளையிட்டதுடன் அவரைக் கடுமையாகத் தாக்கியதாகவும் மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட அளவத்துகொடை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் 7 பேரைக் கைது செய்துள்ளனர்.

# தங்கச் சங்கிலி பறிப்பு

கலஹா செய்தியாளர்

கம்பளையில் பிரத்தியேக வகுப்பிற்குச் சென்ற தனது மகளை வீட்டுக்கு அழைத்துக் கொண்டுசென்ற தாயின் கழுத்திலிருந்த ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மக்கள் செறிந்து காணப்பட்ட சந்தர்ப்பத்தி லேயே இந்தச் சம்பவம் கம்பளை மலபார் வீதியில் உள்ள கோயிலுக்கருகில் நேற்றுமுன் தினம் (11)இடம் பெற்றுள்ளமை அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கெமராவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நானுஓயா ரயில் விபத்தில் அதிபர் பரிதாபமாக உயிரிழப்பு

ஆ.ரமேஸ், டி.சந்ரு, செ.திவாகரன் பீ. கேதீஸ்



நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரதல்ல - கிறேட்வெஸ்டன் ரயில் நிலையத்திற்கு இடைப்பட்ட பகுதியில் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பயணிகள் ரயிலில் மோதுண்டு பாடசாலை அதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (11) உயிரிழந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் அன்றைய தினம் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் நுவரெலியா கல்வி வலையத்திற்குட்பட்ட நானுஓயா இரதல்ல தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய கதிர்வேலு சுப்பிரமணியம் (வயது 52) என்பவர் உயிரிழந்துள்ளதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளார் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கென பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு மீண்டும் பாடசாலை ஆரம்பமான நிலையில் தான் கடமையாற்றும் பாடசாலையை பெற்றோரின் பங்களிப்புடன் சிரமதானம் மேற்கொண்ட பின் தனது வதிவிடமான லூசா கல்கந்தை தோட்டத்திற்கு வழமைபோல ரயில் பாதையில் நடந்து சென்ற வேளையிலேயே ரயில் மோதி வீசப்பட்டு உயிரிழந்துள்ளதாக விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அவர் மீது மோதிய ரயில் நிறுத்தாமல் சென்றுள்ளதாகவும் பின் ரயில் பாதை கண்காணிப்பு ஊழியர் ஒருவர் அதிபரின் உடல் கிடந்ததைக் கண்டு நானுஓயா ரயில் நிலையம் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொது மக்கள் மற்றும் பொலிஸார், ரயில் நிலைய அதிகாரிகள் உடலை மீட்டதாகவும்,குறித்த சம்பவத்தினால் இராதலை பிரதேச தோட்ட மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சடலம் பிரேத பரிசோதணைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகளின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த அதிபர் கலை, கலாசார நிகழ்வுகளில் ஆர்வம் கொண்டவராவார். அத்துடன், தப்பு எனும் நாடகத்தின் நடிகரும் ஆவார். மேலும் கொழும்பு புதிய அலைகலை வட்டம் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.



அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலித் நஸார் அல்மாரிக்குமிடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது. பௌத்த மற்றும் சமய விவகார அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது பௌத்த சமய நிலையமொன்றை டுபாயில் நிறுவுவதற்கான பேச்சுகள் இடம்பெற்றதாகவும் இதற்கிணங்க எதிர்காலத்தில் பௌத்த நிலையமொன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் நிறுவப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார் (படம்:அஷ்ரப் ஏ. சமத்)

# கலதாரி ஹோட்டலில் Talent Show கண்காட்சி





கேக் தயாரித்தல், தையல் பயிற்சி, அழகுக்கலை, ஒப்பனைக் கலை, மெஹந்தி, சமையல் போன்ற பல்வேறு துறைகளின் கீழ் பெண் தொழில்முனைவோரை உருவாக்க டேலண்ட் ஹப் அக்கடமி உதவுகிறது.

இந்நிலையில், டேலண்ட் ஹப் அக்கடமி ஏற்பாடு செய்த Talent Show கண்காட்சி, பணிப்பாளர் பஸ்லியா றமீஸ் தலைமையில் கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவின் முன்னாள் சிரேஷ்ட தொழில் ஆலோசகர் சந்திமா ரொட்ரிகோ, தெமட்டகொடை கைரிய்யா மகளிர் கல்லூரி அதிபர் நஸீரா ஹசனார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

கண்காட்சியில் 260 மாணவிகள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தர்கா நகரில் இலவச கண் பரிசோதனை முகாம்











(பேருவளை நிருபர்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் ஏற்பாட்டிலான 7ஆவது இலவச கண் பரிசோதனை முகாம் நேற்றுமுன்தினம் (11) தர்கா நகர் மீரா ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

காலை முதல் பிற்பகல் வரை கண் வைத்தியர்களினால் கண் பரிசோதனை செய்யப்பட்டதோடு இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டது.

தர்கா நகர் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இதன்மூலம் பயனடைந்தனர்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் களுத்துறை மாவட்டத் தலைவர் மௌலவி எம். அப்துர் ரஹ்மான் (பஹ்ஜி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தர்கா நகர் ஜம்இய்யதுல் உலமா தலைவர் மௌலவி எம்.பீ. நிப்ராஸ் முப்தி வரவேற்புரை நிகழ்த்தினார். தர்கா நகர் குருந்துவத்தை ஸ்ரீ விஜயராம விஹாரையின் விஹாராதிபதி திஸ்ஸமஹாராம துஸித தேரர், ஜம்இய்யதுல் உலமா சபையின் களுத்துறை மாவட்டச் செயலாளர் அஷ்ஷெய்க் பர்ஹான் (நளீமி), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம், பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஹஸீப் மரிக்கார், தர்கா நகர் ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளர் மௌலவி முஹம்மத் ரிஸ்வி, பொருளாளர் மௌலவி முஹம்மத் ஹனீப் (உஸ்வி) உட்பட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் முக்கியஸ்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (12.06.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 194.2356 | 205.9334 |
| கனேடியன் டொலர் | 215.8652 | 228.4957 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.3103 | 43.0009 |
| யூரோ | 310.6194 | 327.3725 |
| ஜப்பான் யென் | 2.0720 | 2.1844 |
| சிங்கப்பூர் டொலர் | 214.4220 | 226.9256 |
| ஸ்ரேலிங் பவுன் | 364.1373 | 382.6130 |
| சுவிஸ் பிராங்க் | 318.2875 | 338.0518 |
| ஐ.அ. டொலர் | 290.0692 | 303.7392 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 785.8163 |
| குவைட் | குவைட் தினார் | 964.5587 |
| ஓமான் | ஓமான் றியால் | 769.4973 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.2565 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.9849 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.6569 |

# "ஆயத்தி" நிலையத்தை தொண்டு நிறுவனமாக மாற்றுவது அவசியம்!

## பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தில் வலியுறுத்தல்





விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு மருத்துவ சிகிச்சைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஆயத்தி" சிறுவர் பராமரிப்பு நிலையத்தை அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனமாக மாற்றுவதன் அவசியம் தொடர்பில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் கடந்த 07 ஆம் திகதி கூடியது. இதன்போதே மேற்படி விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழக ராகம வைத்திய பீட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "ஆயத்தி" சிறுவர் பராமரிப்பு நிலையத்தினால் விசேட தேவையுடைய பிள்ளைகளின் குறைபாடுகள், உடல் - உளரீதியான ஆரம்பப் பரிசோதனைகள், பேச்சு மற்றும் மொழி சிகிச்சை, உடலியல் சிகிச்சை, குடும்ப சிகிச்சை மற்றும் தொழிற் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"ஆயத்தி" நிலையம் அரச மற்றும் தனியார் பங்குடைமையில் செயற்படுவதாகவும் களனிப் பல்கலைக்கழகத்தின் வைத்திய பீட ஊனமுற்றோர் ஆய்வுத் துறையில் தொழில் வல்லுநர்கள், வட கொழும்பு போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் சிகிச்சையாளர்கள் இங்கு சிகிச்சைகளை மேற்கொள்வதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிலையத்தினால் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான சிகிச்சைகளை இலவசமாக வழங்குவதாகவும் இதுவரை மேற்குறித்த பிள்ளைகளுக்கு இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்த பல சேவைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இதன் வெற்றிகரமான தன்மைக்கமைய நாடு பூராகவும் இத்தகைய நிலையங்களை சுகாதார அமைச்சின் கீழ் விரிவுபடுத்த எதிர்பார்ப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிறுவனத்தை தொண்டு நிறுவனமாக அங்கீகரிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் தற்போதைய உண்ணாட்டரசிறை சட்டம் (2017) மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் நிலையத்தைப் பராமரிப்பதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வது கடினமாக உள்ளதாக சுட்டிக்காட்டிய அதன் தலைவர் களனிப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் நிலந்தி டி சில்வா, விசேடமாக வெளிநாட்டு நன்கொடைகளைப் பெறும்போது தொண்டு நிறுவனமாக ஏற்றுக்கொள்வது முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

"ஆயத்தி" சிறுவர் பராமரிப்பு நிலையத்தை அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனமாக மாற்றுவது தேசிய தேவையொன்றாகக் கருதி அது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக ஒன்றியத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

இந்நாட்டில் பேச்சு குறைபாடுள்ள சிறுவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும் பேச்சு மற்றும் மொழி சிகிச்சை நிபுணர் அல்லது பேச்சு நோயியல் நிபுணரை நியமிக்கவேண்டியது காலத்தின் தேவை என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான முதிதா பிரஷாந்தி, மஞ்சுளா திசாநாயக்க, ராஜிகா விக்கிரமசிங்க, கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான சமன்மலி சுமனசேன, கலாநிதி அஷ்வினி பர்னாந்து மற்றும் ஷிரோமி மசகோரள ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் வாடகை வாகன ஊழியர்களுக்கு அநீதி

## எதிர்க்கட்சித் தலைவரிடம் சுட்டிக்காட்டு



கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள வாடகை வாகன ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய வாடகை வாகன சேவைகளின் ஒன்றிணைந்த சங்கத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விமான நிலைய வாடகை வாகன சேவைகளின் ஒன்றிணைந்த சங்கத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை கடந்த 09 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினர்.இதன்போதே மேற்படி விடயத்தை எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்துக்கு அவர்கள் கொண்டு வந்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆரம்பம் முதல் இயங்கி வந்த வாடகை வாகன சேவைக்கு மேலதிகமாக புதிய வாடகை வாகன சேவையை ஆரம்பிக்க இரண்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் விமான நிலைய ரியல் எஸ்டேட் பிரிவின் தலைவர் ஆகியோர் உதவியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனால் பல ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் தமக்கு இதுவரை எந்த முறைப்பாடுகளும் இல்லாமல் உயர்தர சேவையை வழங்கியுள்ளதால் இத்தகைய நியாயமற்ற செயல்களால், தாம் மிகவும் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளதாகவும்,இது தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருமாறும் எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

எதிர்வரும் காலங்களில் இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று நியாயத்தைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது உறுதிபடத் தெரிவித்தார்.

# பிரச்சினைகள் தொடரவேண்டுமென்பதே அனைத்து எதிர்க்கட்சிகளினதும் நோக்கம்

## அதனை மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டுமென்கிறார் அகிலவிராஜ்













(இக்பால் அலி)

நாட்டில் தொடர்ந்தும் பிரச்சினைகள் இருக்க வேண்டும். அதனை வைத்து அரசியல் செய்ய வேண்டுமென்பதே எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு. அதனாலேயே எதிர்க்கட்சியினர் அடிப்படைவாத அரசியலைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். என்று தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் குருநாகல் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம், இவ்விடயத்தில் மக்கள் தெளிவடைய வேண்டுமென்றும் கூறினார்.

தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதிக்குட்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கான பொதுக்கூட்டம் ரிதிகம பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் கட்சியின் தொகுதி அமைப்பாளர் ராஜபுத்திர வீரசிங்க தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சி ஆரோக்கியமான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதால் எல்லோரும் ஒன்றிணைகின்றனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உட்பட ஏனைய கட்சிகள் இணைந்து கூட்டமைப்பாகப் போட்டியிடும் என எதிர்பார்க்கின்றோம்.

பொருளாதாரத்தில் மிகவும் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். தற்போது நாட்டில் எரிபொருள், எரிவாயு வரிசையில்லை, 18 மணித்தியாலம் மின்வெட்டு இல்லை, பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இன்னும் சொற்ப காலங்களில் வங்கி வட்டி வீதங்களும் படிப்படியாகக் குறைக்கப்படும். ஜனாதிபதிக்கு வெளிநாடுகளுடன் இருந்த உறவே நாட்டை துரித கதியில் கட்டியெழுப்புவதற்கு கைகொடுத்துதவியது. ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலங்களில் பல்வேறு சமூகநலத்திட்டங்களை முன்னெடுத்தபோதும் தேர்தலில் ஒரு தொகுதியைக் கூட வெற்றி கொள்ள முடியவில்லை. எங்களுக்கு மக்கள் ஆதரவளிக்கவில்லை. எங்களைப் பார்த்து மக்கள் சிரித்தார்கள். ஊடகங்களின் வாயிலாக எமது கட்சி தொடர்பாக பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு மக்களின் மனதை மாற்றினர். இதனால் மக்கள் எமக்கு ஆதரவளிக்காது மாற்றுக்கட்சிக்கு ஆதரவளித்ததன் பிரதிபலனை இன்று அனுபவிக்கின்றனர்.

விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதியினால் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அதனையிட்டு நாங்கள் சந்தோஷமடைகின்றோம்.இன்று நாட்டுக்குப் பொருத்தமான தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றவுடன் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். இந்த நாட்டை ஆட்சிசெய்யக்கூடிய திறமை ரணிலிடம் மாத்திரமே உள்ளது என்பதை அவர்கள் விளங்கியதாலேயே போராட்டத்தைக் கைவிட்டார்கள். வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை எவரும் முன்சென்று பொறுப்பேற்காத நிலையில் துணிந்து நின்று நாட்டைப் பொறுப்பேற்ற செயல் வீரனே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்நிலையில், நாட்டில் தொடர்ந்தும் எரிபொருள்,எரிவாயு வரிசை தொடர வேண்டும், சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கக் கூடாதென்ற நோக்கத்திலேயே எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

எனவே, இவ்விடயத்தில் மக்கள் தெளிவடைய வேண்டும்.எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்த முன்வர வேண்டும் - என்றும் தெரிவித்தார்.

# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று திறந்துவைப்பு






(பாறுக் ஷிஹான், ஆலையடிவேம்பு, எருவில் செய்தியாளர்கள்)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய ஆடிவேல் உற்சவத்தைமுன்னிட்டு கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் திங்கட்கிழமை(12) காலை 7.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்களின் ஆசியுரையுடனும் விசேட பூஜை நடத்தியும் காட்டுப் பாதை திறக்கப்பட்டது.

இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஜெ.என்.டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட அரச அதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க உள்ளிட்ட யாத்திரிகர்கள், அன்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அனிருத்தனின் ஆலோசனைக் கமைவாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோரின் ஏற்பாட்டில் காட்டுப் பாதை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பித்த ஜெயா வேல்சாமி தலைமையிலான குழுவினர் உள்ளிட்ட சுமார் 2000 வரையான பக்தர்கள் இப்பாதையூடாக முதல் நாளில் பயணித்தனர்.

சுமார் 45 ஆயிரம் பக்தர்கள் வரை இம்முறை பாதயாத்திரை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, ஆறு நாட்கள்வரை இந்தப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. நேற்று திறக்கப்பட்ட காட்டுப்பாதையானது எதிர்வரும் 25ஆம் திகதி மூடப்படும்.

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள கதிர்காம கொடியேற்றமானது ஜூலை 04ஆம் திகதி இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரி மாணவிக்கு பாராட்டு




(கிண்ணியா, கந்தளாய் செய்தியாளர்கள்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி உ.அபிநயா திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து திங்கட்கிழமை(12) காசோலை வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையிலும் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலதிக பிரதிலாபக் கொடுப்பனவாக ரூபா 25ஆயிரம் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வகையில் இவ்வேலைத்திட்டமும் ஒன்றாகும். இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி பா.சஜிக்கா மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர் எஸ்.புவகிதன் கலந்து கொண்டனர்.

# உகந்தை முருகன் ஆலயத்துக்கு இடைக்கால நிர்வாகம் தெரிவு



(திராய்க்கேணி செய்தியாளர்)

உகந்தை முருகன் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் யாப்பு தெளிவுபடுத்தலும் கூட்டம் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஆலய உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் லாகுகல பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா தலைமையில் அண்மையில்(09) இடம்பெற்றது.

இத்தெரிவு நீதிமன்ற அறிக்கையின்படி பிரதேச செயலாளரின் கண்காணிப்பில் இடம்பெற வேண்டும் என கேட்டுக்கொண்டதற்கிணங்க இடம்பெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் மேற்பார்வையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றபோதும் இணக்கப்பாடு இன்மை காரணமாக லாகுகல பிரதேச செயலாளர் தலைமையில் இடைக்கால நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இதன்போது இரு மாவட்டங்களிலிருந்தும் 500க்கு மேற்பட்ட ஆலய உறுப்பினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களும் மற்றும் பல பிரமுகர்களும் இதன்போது கலந்து கொண்டதாக லாகுகல பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com







சேருவில - ஈச்சிலம்பற்று (வெருகல்) படுகொலையின் 37ஆம் ஆண்டு நினைவு தினம் பூனகர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவேந்தல் மண்டபத்தில் திங்கட்கிழமை(12) அனுஷ்டிக்கப்பட்டது. ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலருணவுப் பொருட்களை எடுத்துவரும் வழியில் சேருவில – மகிந்தபுர பகுதியில் வைத்து 1986ஆம் ஆண்டு அரச அதிகாரி 03 பேர் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அப்துல்சலாம் யாசீம், கந்தளாய், மூதூர் செய்தியாளர்கள்)

# நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

பல்வேறு மக்கள் நலன்சார் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்புக்கு என்றும் உறுதுணையாக இருந்து வருகின்ற சி.எஸ்.எம்.டபிள்யூ.ஏ. பேரவையினை கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை(10) கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

பேரவையின் தலைவி ஃபிரோஸா காஸிம் இலங்கை வந்திருந்தபோதே இந்நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வுக்கு வை.எம்.எம்.ஏ.பேரவையின் தலைவி திருமதி ஃபவாஸா தாஹா உட்பட அதன் உயர்நிர்வாக உறுப்பினர்களும் வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் தேசமானிய காலித் எம்.பாறுக், கனடாவில் வசிக்கும் பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான முஹம்மது அஸார் மற்றும் கொழும்பு டைம்ஸ் பத்திரிகை தலைமை பதிப்பாசிரியர் முஹம்மது ரஸூல்டீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மீராவோடையில் விளையாட்டு பயிற்சி மைதானம் திறப்பு

கல்குடா பிரதேசத்தில் வசிக்கும் சகல இளைஞர்களுக்கும் விளையாட்டு தொடர்பான பயிற்சிகள் மற்றும் விளையாட்டு கல்வி என்பவற்றை முறையே கற்பித்துவரும் 'கல்குடா விளையாட்டு விஞ்ஞான மற்றும் உடற்பயிற்சி அகடமி' தனது சேவையை விரிவுபடுத்தும் வகையில் பயிற்சி மைதானம் ஒன்றை ஞாயிற்றுக்கிழமை (11) மீராவோடையில் திறந்து வைத்தது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக நவ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் ஆளுநருமான பேசல ஜயரத்ன கலந்துகொண்டிருந்தார்.

மேலும் சட்டத்தரணி சேனால் வெல்கம மற்றும் அதிதிகள் பலரும் கலந்துகொண்டனர். வருகை தந்த அதிதிகளை அகடமியின் பணிப்பாளர் இர்பான் தலைமையில் கிட்ஸ் கார்டன் முன்னிலை பாடசாலை மாணவர்களின் கலாசார நிகழ்வுடன் வரவேற்பு இடம்பெற்றதுடன் பிரதம அதிதியினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மைதானத்தின் பெயர்ப்பலகையும் இதன்போது திறந்து வைக்கப்பட்டது.






அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் சுற்றாடலை மேம்படுத்தும் ஒரு வார கால விசேட வேலைத்திட்டம் திங்கட்கிழமை(12) அமுல்படுத்தப்பட்டது. உலக சுற்றாடல் தின அனுஷ்டிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கமைவாக அக்கரைப்பற்று கல்வி வலய அறிவுறுத்தல்களுக்கிணங்க இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன. இதன்போது அதிபர் ஏ.பி.முஜீன் மரக்கன்றினை நட்டு வைத்தார். பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், உதவி அதிபர்களான ஏ.எம்.நபீல், ஏ.எல்.சம்சுல் பழீல், ஏ.எல்.முகைதீன்பாவா, ஆசிரியர் எம்.ஐ.இக்பால் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (அட்டாளைச்சேனை செய்தியாளர்)

# ஆசிரிய ஆலோசகர் சஹறூன் கல்விப் பணியிலிருந்து ஓய்வு

(பொலிவேரியன் செய்தியாளர்)

கல்முனை கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஆதம்பாவா சஹறூன் இன்று செவ்வாய்க்கிழமை(13) அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

35 வருட கல்விச் சேவையில் ஆசிரியராக 23 வருடங்களும் ஆசிரிய ஆலோசகராக 12 வருடங்களும் அவர் சேவையாற்றியுள்ளார். சாய்ந்தமருது கல்விக் கோட்டத்துக்கென வலயத்தினால் நியமிக்கப்பட்டிருந்த ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகரான இவர், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை அடைவுமட்ட உயர்ச்சிகள், எண்ணறிவு, எழுத்தறிவு, பரிகார நிகழ்ச்சித்திட்டம், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பாடசாலைகளின் பௌதீக வள அபிவிருத்தியிலும் அதிபர், ஆசிரியர்களின் நலன்களிலும் முன்னின்று உழைத்தவர்.

சாய்ந்தமருது – 10 ஐச் சேர்ந்த மர்ஹூம்களான உமறுலெவ்வை ஆதம்பாவா - முகம்மது இப்றாலெவ்வை கதீஜாவீவீ தம்பதியருக்கு மகனாக 1963.06.14ஆம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது அல் - ஹிலால் வித்தியாலயத்திலும் இடைநிலை மற்றும் உயர் நிலைக்கல்வியை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்றார்.



அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பக்கல்வியில் விசேட ஆசிரியர் பயிற்சியையும் தேசிய கல்வி நிறுவகத்தில் ஆரம்ப கணிதத்தில் விசேட பயிற்சியையும் ஆரம்பக்கல்வியில் விசேட கல்விமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ள இவர், சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (GMMS) பட்டதாரி ஆசிரியையாக கடமையாற்றும் ஆதம்பாவா ஜுனைதா என்பவரின் கணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரக கணினி சத்திரசிகிச்சை பிரிவு ஆரம்பம்



(கல்லடி, வெல்லாவெளி செய்தியாளர்கள்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சிறுநீரக கணினி சத்திரசிகிச்சை விடுதி, ஆரோக்கிய வாழ்வு நிலையம் மற்றும் Digital OPD System ஆகிய பிரிவுகள் ஞாயிற்றுக்கிழமை(11) உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி கலாரஞ்ஜினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன கலந்து கொண்டு புதிய பிரிவுகளை திறந்து வைத்துள்ளார்.

இதன்போது சுகாதார அமைச்சின் பணிப்பாளர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர், வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# நிந்தவூர் சுகாதாரப் பிரிவிலுள்ள உணவகங்களில் திடீர் சோதனை






(மாளிகைக்காடு செய்தியாளர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட வியாபார நிலையங்கள், ஹோட்டல்கள் மற்றும் பழக்கடைகளின் தரத்தைப் பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் அனைத்து இடங்களிலும் சோதனை நடவடிக்கை திங்கட்கிழமை(12) மேற்கொள்ளப்பட்டது.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்.றயீஸின் வழிகாட்டலில் வர்த்தக நிலையங்கள், பழக்கடைகள், சில்லறைக் கடைகள், ஹோட்டல்கள், வெற்றுக்காணிகள் என அனைத்திலும் திடீர் சோதனைகள் இடம்பெற்றன.

இந்தக் களச்சோதனையின் போது ஒவ்வொரு கர்ப்பிணித்தாய்க்கும் போஷாக்குமிக்க உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 45ஆயிரம் ரூபா பெறுமதியான கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்ய அனுமதியளிக்கப்பட்ட வியாபார நிலையங்களில் அரிசி, பருப்பு, கச்சான்(தோல் நீக்கியது), ரின்மீன், கடலை, சோயா, முட்டை, பாசிப்பயறு, நெத்தலிக்கருவாடு என்பன உள்ளதா என்றும் அவற்றின் தரம், இவை தவிர்ந்த ஏனைய பொருட்கள் விற்கப்படக்கூடாது என்றும் கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில், அவற்றை மீறுகின்ற கடைகளுக்கும் தாய்மார்களுக்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது மக்களின் நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள், பழங்கள் மற்றும் செயற்கையாக பழங்களை பழுக்கவைப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய இரசாயனங்கள், இரசாயனம் தெளிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய கருவிகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இப்பரிசோதனை நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். றயீஸ், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# நச்சுத்தன்மையான மீனை உண்டு சிகிச்சை பெற்றுவந்த 50வயது பெண்ணும் உயிரிழப்பு

(கனகராசா சரவணன், மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டம் மாங்காடு எனும் கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை (08) கடல் மீனினமான பேத்தை இன மீனை சமைத்து உட்கொண்டதில் சுகயீனமுற்று வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு பெண்ணும் ஞாயிற்றுக்கிழமை(11) இரவு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த வியாழக்கிழமை மாங்காடு பகுதியிலுள்ள கடலில் மீனவர்களின் வலையில் சிக்கிய குறித்த மீன்கள் உண்பதற்கு உகந்ததல்ல என்பதை அறிந்து மீனவர்கள் அதனை எடுத்து வீசியுள்ளனர்.

இந்நிலையில், அங்கு சென்ற ஒரு குடும்பத்தினர் இவ்வாறு மீனவர்கள் வீசிய அக்குறித்த மீன்களை பொறுக்கி எடுத்துச் சென்றுள்ளனர். அதனை எடுக்க வேண்டாம் என குறித்த மீனவர்கள் தெரிவித்ததையும் அவர்கள் பொருட்படுத்தாது அன்றையதினம் மதிய உணவுக்காக சமைத்து உண்டுள்ளனர்.

இதையடுத்து அவர்கள் மாலை வேளையில் திடீர் சுகயீனமுற்ற நிலையில், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அன்றையதினமே மாலை 27 வயதான குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்திருந்தார்.

எனினும், மேலும் மூவர் அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதையடுத்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த 50 வயதுடைய பூலியாமலர் எனும் பெண்ணும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் தற்போது களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் உட்கொண்ட உணவு மாதிரிகளை களுவாஞ்சிக்குடி பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளதுடன் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 19 வயதுடைய பெண்ணும் மற்றும் மூன்றரை வயதுடைய ஆண் பிள்ளையும் சிகிச்சையின் பின்னர் வீடு சென்றுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# புகைத்தல், மது எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு




(அக்கரைப்பற்று செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக மட்டத்திலான சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவு ஏற்பாடு செய்த சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக மட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை(11) இடம்பெற்றது.

'புகைத்தலிலிருந்து மீண்ட ஒரு கிராமம் - மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம்' எனும் தொனிப்பொருளிலான விழிப்பூட்டும் ஊர்வலத்தின்போது அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார், உதவிப் பிரதேச செயலாளர் யஹ்யா ராசித் மற்றும் அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சமுதாய அமைப்பின் தவிசாளர், அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், மத்ரசா மாணவர்களின் பங்குபற்றலுடன் பிரதேச செயலக முன்றிலில் ஆரம்பித்த குறித்த ஊர்வலமானது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

தாயின் வயிற்றில் வாழும் குழந்தை முதல் சகலரினதும் சுற்றுச் சூழலை மது மற்றும் சிகரெட் புகைத்தலிலிருந்து விடுதலையான நேயமிக்க சூழல் ஒன்றுக்கு பங்களிப்பு செய்ய உதவுமாறு ஊர்வலமாகச் சென்றவர்கள் கேட்டுக் கொண்டனர்.



**சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பொத்துவில் அருகம்பே பிரதேசத்துக்கு அண்மையில் (08) விஜயம் செய்தார். இதன்போது சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரசிங்க, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, மாவட்ட அரச அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், பொத்துவில் சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம்.ஜெளபர் உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.**

**(மாவடிப்பள்ளி செய்தியாளர்)**

# வைத்திய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை சுகாதாரப் பிராந்தியத்தில் கடமையாற்றும் தெரிவுசெய்யப்பட்ட வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான இருநாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறையின் இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை துறைசார் நிபுணர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் பல்வேறு விரிவுரைகள் இடம்பெற்றன.

இதன்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன மற்றும் சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிரினால் இணைப்புச் செய்யப்பட்ட இப்பயிற்சிநெறியில் வைத்திய உத்தியோகத்தர்களும் தாதிய உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித் கலந்துகொண்டு பணிப்பாளர் சார்பான உரையை நிகழ்த்தியதுடன் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட பங்குபற்றுநர்களிடம் பயிற்சி நெறி தொடர்பிலான விளக்கங்களையும் கேட்டறிந்தார்.

## போடியார் புலம்பல்!



**வாறமாதத்துக்குள பிரசனைக்கு தீர்வு காண ஜனாதிபதி ரணில் சம்மந்தரிட்ட உறுதி வழங்கியதாக செய்தி ஒண்ட பார்த்தன்! எந்த உறுதிய வழங்கி இருக்காரோ தெரியாது..! வடக்கு கிழக்கில பாஞ்சாலையும், புத்தர் சிலயும் வைக்கிற உறுதியோ? இல்லாட்டி மட்டக்களப்பு கெவிளியாமடு, மாதவன, பகுதிகளில உள்ள மேச்சல் தரையில அபகரித்த உறுதியோ? எந்த உறுதிய சம்மந்தரிட்ட வழங்கினார் எண்டதுதான் தெரியல்ல.**



**கிழக்கு மாகாணத்தின் சமீபத்திய அபிவிருத்திகள் குறித்து மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ். ட்ஜகார்யன் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை(11) ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது கிழக்கு மாகாணத்துக்கு வருகைதரும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துத் தருவதாக ரஷ்யத் தூதுவர், ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார். (அப்துல்சலாம் யாசீம், கிண்ணியா செய்தியாளர்)**

# திருமலை மாவட்ட வர்த்தக நிர்வாக சபை ஒன்றுகூடல்




(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட வர்த்தக சபையின் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஒன்றுகூடல் ஞாயிற்றுக்கிழமை (11) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நிர்வாக சபைத் தலைவர் ராஜாராம் மோகன் தலைமையில் இடம்பெற்ற ஒன்று கூடலில் பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. மாவட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்து தொழில் முனைவோரின் அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புள்ள வணிகர்களின் குழுவாக இக்குழு காணப்படுகிறது.

மேலும் வணிகர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் அரசாங்கத்தை வலியுறுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப் பட்டது. வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவித்தல், திருகோணமலை உள்ளூர் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்துதல் போன்ற விடயங்களை விரிவுபடுத்தல் போன்றவையே சபையின் நோக்கமாகக் காணப்படுகின்றன.

மாவட்டம் முழுவதும் எமது சமூக அபிவிருத்திகளை அரசாங்க துறைசார் அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ள அதேவேளை, கடந்த காலங்களிலும் இதனை முன்னெடுத்துள்ளதாகவும் மேலும் கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து புதிய பல திட்டங்களை முன்வைத்தும் செயற்படக் காத்திருக்கிறோம் என்றும் தெரிவித்தார்.

இதேபோன்று மாவட்ட செயலாளருடன் இணைந்து பணிகளை முன்னெடுப்பதுடன் சமூகத்தில் வாழும் விளிம்பு நிலை மக்களின் தேவைகளை அறிந்தும் வர்த்தகக் கட்டட பல்துறை சார்ந்த விடயங்களை எதிர்காலத் தில் திறம்பட ஒத்துழைப்பினூடாக வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்குழுக்கூட்டத்தில் வர்த்தக சபைச் செயலாளர் மார்ட்டின் ஜீ.ஜெயகாந்த், பொருளாளர் எஸ்.காந்தவேல் பத்மநாதன் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு பரிசோதனை நடவடிக்கை முன்னெடுப்பு

(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு - மண்முனை, தென் எருவில்பற்று பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு பரிசோதனை நடவடிக்கைகள் திங்கட்கிழமை(12) முன்னெடுக்கப்பட்டிருந்தன.

களுவாஞ்சிக்குடி பொதுச் சுகாதார வைத்திய பிரிவினரின் ஏற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர்களும் இணைந்து பல பகுதிகளிலும் பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது பொது இடங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், மக்கள் குடியிருப்புகள் என பல இடங்களிலும் நேரடி கள விஜயங்களை மேற்கொண்டு மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதோடு, டெங்கு பரவும் வகையில் தமது குடியிருப்புகளை வைத்திருந்தவர்களுக்கு உடன் துப்புரவு செய்யுமாறும் எச்சரித்தனர்.

எதிர்வரும் மழை காலத்தில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகம் காணப்படுவதனால் நாம் முற்கூட்டியே எமது பிரதேசத்தை டெங்கு நோயற்ற பிரதேசமாக மாற்றுவதற்காக வேண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைவாகவும் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் வழிகாட்டுதலின் பேரிலும் இப்பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளை விளையாட்டுக் கழகங்கள், பிரதேச செயலக



உத்தியோகத்தர்கள் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களுடனும் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக இதன்போது களுவாஞ்சிக்குடி பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.இளங்கோவன் தெரிவித்தார்.

# அம்பாறையில் கடும் உஷ்ணம்

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து வரும் கடும் உஷ்ணம் காரணமாக காலையில் மாத்திரமின்றி மாலைவேளைகளிலும் பொதுமக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இரவு வேளைகளில் காற்றுக்கூட வீசாத நிலையில் ஏற்படும் புழுக்கத்தினால் மக்கள் உள்ளூர் வீதிகளில் குழுமியிருந்து காலம் கழித்து வருகின்றனர்.

இவ்வாண்டு என்றுமில்லாதவாறு ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாத காலப்பகுதியில் அதிகளவு வெப்பம் பதிவாகி வருவதோடு மழையும் குறைந்துவருவதாக வானிலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இக்காலநிலை காரணமாக தடிமன், இருமல், காய்ச்சல் போன்ற வைரஸ் நோய்கள் ஏற்பட்டுள்ளதோடு சிறுவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் சிறுவர் தொகையும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# மழை வேண்டி குனூத் ஓதுக

## அம்பாறை மாவட்ட உலமா சபை வேண்டுகோள்

(சாய்ந்தமருது செய்தியாளர்)

மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவில் நீடித்துச் செல்கின்ற அதிகூடிய வெப்பம் நிறைந்த காலநிலையைத் தணிப்பதற்காக மழை பொழிய வேண்டி ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் ஓதுமாறு அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியில் மேற்படி உலமா சபையின் தலைவர் ஐ.எல்.எம்.ஹாஷிம் மௌலவி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கமைவாக, இவ்வேண்டுகோள் விடுக்கப்படுவதாக அதன் செயலாளர் ஏ.எல்.நாசிர்கனி மௌலவி தெரிவித்தார்.

இதன்படி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் அந்நாஸிலாவை ஓதுமாறு பள்ளிவாசல்களின் நிர்வாகிகளும் இமாம்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வெள்ளிக்கிழமை குத்பாவில் மழை வேண்டி விசேடமாக பிரார்த்திக்குமாறும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் மழை வேண்டி தொழுகை நடத்துமாறும் அம்பாறை மாவட்ட உலமா சபை வேண்டுகோள் விடுப்பதாக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ காலமானார்



இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி (வயது 86) உடல்நலக் குறைவால் நேற்று (12) காலமானார்.

சில்வியோ பெர்லுஸ்கோனி (Silvio Berlusconi) கடந்த ஏப்ரல் மாதம் நுரையீரல் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் மிலனிலுள்ள சான் ரஃபேல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தநிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இத்தாலியின் நான்கு முறை பிரதமராக இருந்த சில்வியோ தலைமையில் 1994 முதல் 2011வரை ஆட்சி இடம்பெற்றது இந்நிலையில், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அரசியல் மற்றும் தனிப்பட்ட விடயங்களால் பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியதுடன் நிதி மற்றும் பாலியல் குற்றச்சாட்டுகளால் பரவலாக அறியப்பட்டவர். எனினும், தமது அரசியல் ஆட்சியில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்தவர். தேர்தல் களத்தில் அவரது ஆதிக்கம் ஒரு தலைமுறையினரிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது.

பெர்லுஸ்கோனியின் மரணம் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது என்றும் இத்தாலியின் பாதுகாப்பு அமைச்சர் கைடோ க்ரோசெட்டோ தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் கடும் மழை: 34 பேர் பலி; 147 பேர் காயம்



பாகிஸ்தானின் வடமேற்கு பகுதிகளில் பெய்த கனமழையால் வீடுகள் இடிந்து விழுந்ததில் 08 குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ளதுடன் 147 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் கைபர் பக்தூங்வா மாகாணம் அமைந்துள்ளது. கடந்த சில நாட்களாக அந்த மாகாணத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது.

பானு, திகான், லக்கி மார்வாட், கராக் ஆகிய 04 மாவட்டங்களில் வீடுகள் மற்றும் மரங்கள் முறிந்துவீழ்ந்த விபத்தில் 08 குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ளதுடன் 147 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அத்தோடு, 200 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. 100இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன.

நிவாரணப் பணிகளை மேற்கொள்ள கைபர் பக்தூங்வா மாகாண அரசு சார்பில் ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பலத்த மழையுடன் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் கைபர் பக்தூங்வா மாகாணம் முழுவதும் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் ஜூன் முதல் செப்டெம்பர் வரை பருவமழை காலமாகும். கடந்த ஆண்டு பெய்த வரலாறு காணாத மழையால் ஆயிரத்து 700 பேர் உயிரிழந்தனர். இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் இலங்கைத் தமிழர்



சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவரும் பிரபல பொருளாதார நிபுணரும் முன்னாள் துணைப் பிரதமரும் மற்றும் சிரேஷ்ட அமைச்சருமான தர்மன் சண்முகரத்தினம் போட்டியிடவுள்ளார்.

சிங்கப்பூரின் சிரேஷ்ட அமைச்சர் மற்றும் சமூக கொள்கைகள் அமைச்சர் மற்றும் மத்திய வங்கித் தலைவர் உட்பட பல பதவி வகித்து வந்தவர் தர்மன் சண்முகரத்தினம்.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில் மேற்குறித்த பதவிகளை அவர் இராஜினாமா செய்துள்ளார்.

இதுகுறித்து தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லூங்க்கு எழுதியுள்ள கடிதத்தில்,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளதுடன், அரசியலிலிருந்து தான் ஓய்வு பெறுவதாகவும் அரசாங்கத்தில் தான் வகிக்கும் சகல பதவிகளிலிருந்தும் ஆளும் மக்கள் செயற்பாட்டுக் கட்சியின் (பிஏபி) அங்கத்துவத்திலிருந்தும் ஜூன் 7ஆம் திகதியுடன் விலகுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிங்கப்பூர் நாணய அதிகார சபை என அழைக்கப்படும் சிங்கப்பூர் மத்திய வங்கியின் தலைவர், பதவி, சிங்கப்பூர் முதலீட்டுக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், சிங்கப்பூர் பொருளாதார அபிவிருத்திச் சபையின் சர்வதேச ஆலோசனைப் பேரவையின் தலைவர் உட்பட ஏனைய பதவிகளிலிருந்தும் தான் இராஜினாமா செய்வதாக தர்மன் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்



# வெடித்து சிதறிய மயோன்

## நச்சுவாயு வெளியேற்றத்தால் 12,800 பேர் இடம்பெயர்வு

பிலிப்பைன்ஸின் மயோன் எரிமலை வெடித்து சிதறிவரும் நிலையில், வெளியேறும் நெருப்பு குழம்பிலிருந்து நச்சுவாயு மற்றும் புகை வெளியேறி வருகிறது.

எரிமலையை சுற்றியுள்ள பகுதியிலிருந்து சுமார் 12ஆயிரத்து 800 பேர் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாணமான அல்பேயிலுள்ள மயோன் மலையிலிருந்து சூடான பாறைகள் விழுவதாக நில அதிர்வு ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மயோன் மலைப்பகுதியிலுள்ள 24 எரிமலைகளில் ஒரு எரிமலை சனிக்கிழமை வெடித்த போது சுமார் 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பகுதிகளில் பாறைகள் விழுந்தன. சல்பர் டை ஒக்சைட் உமிழ்வு மூன்று மடங்காக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, எரிமலை வெடிப்புகளுக்கு விடப்படும் உச்சபட்ச எச்சரிக்கையான 5ஆம் நிலையில் தற்போது 3 ஆவது படி நிலை எச்சரிக்கையை அரசு அறிவித்துள்ளது.

# அமெரிக்காவில் கறுப்பின சிறுவன் சுட்டுக்கொலை



அமெரிக்காவில் பல்பொருள் அங்காடியொன்றில் திருடிய கறுப்பின சிறுவனை அந்நாட்டு காவல் அதிகாரிகள் சுட்டுக்கொன்றுள்ளனர். இச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொலராடோ மாகாணம் அரோரா நகரத்திலுள்ள பல்பொருள் அங்காடியில் இளைஞர்கள் சிலர் திருட்டில் ஈடுபடுவதாக வந்த அழைப்பையடுத்து James Snapp, Roch Gruszeczka ஆகிய காவல் அதிகாரிகள் அங்கு சென்றனர்.

அப்போது தப்பியோடிய ரிச்சர்ட் சன் என்ற 14 வயது கறுப்பின சிறுவனை துரத்திச் சென்ற அவர்கள், தரையில் தள்ளி துப்பாக்கியால் சுட்டனர். துப்பாக்கிக் குண்டு வயிற்றில் பாய்ந்ததில் படுகாயமடைந்த ரிச்சர்ட் சன்னை காப்பாற்ற காவலர்களும் முயன்றனர்.

ஆனால் சிகிச்சை பலனின்றி ரிச்சர்ட் சன் உயிரிழந்தார். கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்துக்கு பல்வேறு அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், இது தொடர்பான வீடியோ காட்சிகளை கொலராடோ பொலிஸார் தற்போது வெளியிட்டுள்ளனர்.

# எகிப்து சுற்றுலா படகில் தீ: 13 பேர் மீட்பு; மூவர் மாயம்




எகிப்தின் செங்கடல் பகுதியில் மோட்டார் படகொன்று தீப்பிடித்ததில், அதில் பயணித்த மூன்று சுற்றுலாப் பயணிகள் காணாமல் போயுள்ளனர்.

எகிப்தின் செங்கடல் கடற்பகுதியிலுள்ள மார்சா ஆலம் என்ற இடத்தில் சுற்றுலாப் படகு சென்று கொண்டிருந்தபோது சுற்றுலாப் படகில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அந்தப் படகில் 14 பணியாளர்கள் மற்றும் பிரித்தானிய சுற்றுலாப் பயணிகள் 15 பேர் உட்பட மொத்தம் 29 பேர் சென்றுள்ளனர். அதில் பிரித்தானியாவைச் சேர்ந்த 12 சுற்றுலாப் பயணிகளும் 14 எகிப்தியர்களும் மீட்கப்பட்டுள்ள நிலையில், 03 பேர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தங்குவதற்கு அறையின்றி காத்திருந்த இலங்கை வீரர்கள்



இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடருக்கான தகுதிகாண் போட்டிகளில் ஆடுவதற்காக சிம்பாப்வே சென்ற இலங்கை அணியினர் அந்த நாட்டில் ஹோட்டலில் அறைகளுக்கு வெளியே பல மணிநேரம் காத்திருக்கும் படங்களை இலங்கை அணியின் பல வீரர்கள் சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொண்டனர். இன்ஸ்டகிராமில் பதியப்பட்ட படங்கள் பின்னர் அழிக்கப்பட்டன.

இதேவேளை இது குறித்து விளக்கமளித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை, இலங்கை அணியினர் ஹோட்டலுக்கு மதியம் வந்து சேர்ந்தனர். அவர்கள் வந்தவேளை மற்றுமொரு அணியும் வந்ததால் இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்களுக்குரிய அறைகளை ஒதுக்குவதில் தாமதம் ஏற்பட்டது. எனினும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்த விடயத்தை ஹோட்டல் நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டுவந்ததை தொடர்ந்து, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள்:

# டென்னிஸ் உலகில் புதிய வரலாறு படைத்த ஜோகோவிச்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற செர்பிய நாட்டு வீரர் நோவக் ஜோகோவிச் 23ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று உலக சாதனை படைத்தார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் நான்காம் நிலை வீரரான நோர்வேயின் காஸ்பர் ரூட்டை ஜோகோவிச் தோற்கடித்தார். மூன்று செட்களிலும் 7-6 (7-1), 6-3, 7-5 என்ற செட் கணக்கில் ஜோகோவிச் வெற்றி பெற்றார்.

இது ஜோகோவிச்சின் 23ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். இதன்மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற உலக சாதனையை ஜோகோவிச் படைத் துள்ளார். போட்டிக்கு முன், ஜோகோவிச் மற்றும் ரஃபேல் நடால் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுடன் சமநிலையில் இருந்தனர். இதுவரை 70 கிராண்ட்ஸ்லாம் போட்டி களில் விளையாடியுள்ள 36 வயதான ஜோகோவிச், 34ஆவது முறையாக இறுதிப் போட்டியில் விளையாடினார்.

# இந்திய - பாகிஸ்தான் ஆட்டம் இலங்கையில்?

2023ஆம் ஆண்டுக்கான ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணி விளையாடும் போட்டிகள் இலங்கையில் நடத்தப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆசியக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் உள்ளிட்ட அணிகள் இதில் விளையாடவுள்ளன.

பாகிஸ்தானில் இந்தப் போட்டிகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய அணி அங்கு செல்லாது என பி.சி.சி.ஐ. சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்திய அணி விளையாடும் போட்டிகள் எங்கு நடத்தப்படும் என்ற குழப்பம் நிலவியது. அதனைத் தொடர்ந்து, ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்திய அணிக்கான லீக் போட்டிகள் மட்டும் நடைபெறும் என்று கூறப்பட்டது.

இந்நிலையில், இந்திய அணி விளையாடும் போட்டிகள் இலங்கையில் நடைபெறும் எனும் செய்தி வெளியாகியுள்ளது. அதன்படி, இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் பரபரப்பான ஆட்டம் இலங்கையில் நடைபெறவுள்ளது. அதன்படி, மொத்தமுள்ள 13 போட்டிகளில் 04 போட்டிகள் மட்டும் பாகிஸ்தானிலும் எஞ்சிய, இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட 09 போட்டிகள் இலங்கையிலும் நடத்தப்படும்.

# நுவரெலியா உதைபந்து லீக் 2022 - 2023 தங்கக் கிண்ணம் யங் பேர்ட்ஸ் அணி வசம்













(ஆ.ரமேஸ்)

நுவரெலியா உதைபந்தாட்ட சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான லீக் போட்டி தொடரில் வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு விழா மற்றும் 2022ஆம் ஆண்டு 2023ஆம் ஆண்டுக்கான தங்கக் கிண்ணம் மற்றும் வெள்ளிக் கிண்ணங்க ளுக்கான போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை நுவரெலியா மாநகர சபை பொது மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் தலைமையில் இடம்பெற்ற இப் பரிசளிப்பு விழாவில் பல முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட உதைபந்தாட்ட அணிகளும் கலந்து கொண்டன.

இதன்போது இடம்பெற்ற தங்கக் கிண்ண இறுதிப் போட்டியில் நுவரெலியா யங் பேர்ட்ஸ் மற்றும் யங் யுனைடெட் அணிகள் மோதின. இதில் யங் பேர்ட்ஸ் அணி 1-0 என வெற்றி பெற்றது. தங்கக் கிண்ணத்தை வென்ற யங் பேர்ட்ஸ் அணியின் சிறந்த விளையாட்டு வீரராக வி. விவேக் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த கோல் காப்பாளராக யங் யுனைடெட் அணியின் ரஹீம் தெரிவு செய்யப்பட்டார்.

இப் போட்டித் தொடரில் வெள்ளிக் கிண்ணத்தை ஸகிராப் தோட்டத்தைச் சேர்ந்த சன்பெர்ட்ஸ் அணியினர் பெற்றுக் கொண்டனர். இதில் சிறந்த விளையாட்டு வீரராக ஜே ஸ்டீபன் ராஜ் மற்றும் சிறந்த கோல் காப்பாளராக வி.எஸ்.கார்த்திக் தெரிவு செய்யப்பட்டார்கள். அதேவேளை, ஏ பிரிவுக்கான போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அணியாக நேஸ்பி லேக் சைட் அணியினரும் பி பிரிவுக்கான போட்டியில் முதலாம் இடத்தை ஹைபோரெஸ்ட் அணியினரும் சி பிரிவுக்கான போட்டித் தொடரில் பிரண்ட்ஸ் அணியினரும் பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7